# கல்வெட்டு

ருவள்ளுவராண்டு-2022 (பிரமோதூத ஆண்டு) மாசித் திங்கள்



ரோமானிய மன்னன் வேலன்டைன் காலத்திய
செப்புக்காசு — *(கி.பி. 383-395)*

காலாண்டிதழ் - 29 ★ (1991, பிப்ரவரித் திங்கள்) ★ விலை ரூ. 1-5
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

உள்ளே......


| | | பக்கம் |
| --- | --- | --- |
| 1 சோழமாதேவி கயிலாயமுடையார் கோயில்<br>—கி. ஸ்ரீதரன் | ... | 1 |
| 2 வெண்பக்கோட்டை செப்பேடு<br>—டாக்டர் எஸ். எம். கமால் | ... | 6 |
| 3 நேமம் சேவகப் பெருமாள் ஐயனார்<br>—மா. சந்திரமூர்த்தி | ... | 12 |
| 4 பாண்டிக் கோவையும், பாண்டியன் முதலாம் இராஜசிம்மனும்<br>—டாக்டர் எஸ். குலசேகரன் | ... | 18 |
| 5 திருமலை நாயக்கர் பற்றிய மெக்கன்சி சுவடிகள்<br>—டாக்டர் ம. இராசேந்திரன் | ... | 25 |
| 6 COINS OF VALENTINE AND ARCADIUS<br>—Natana. Kasinathan | ... | 35 |
| 7 வீரகேரளன் காசு<br>—ஆர். வசந்தகல்யாணி | ... | 39 |


இந்நூலில் காணும் கட்டுரைகளின் கருத்துக்களுக்கும், முடிவுகளுக்கும் அக்கட்டுரைகளின் படைப்பாளர்களே பொறுப்பாவர்.

# சோழமாதேவி கயிலாயமுடையார் கோயில்

கி ஸ்ரீதரன்

பதிவு அலுவலர், திருச்சி

திருச்சி - தஞ்சை சாலையில் திருவெறும்பூரிலிருந்து தெற்கே மூன்று கி.மீ. தொலைவு சென்றால் சோழமாதேவி என்னும் ஊரை அடையலாம். இவ்வூரின் வடகிழக்குப் பகுதியில் வயல்களுக்கு நடுவே அழகான கலையழகும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க சோழர் காலக் கோயில் ஒன்று சிதைவுற்றுக் காணப்படுகிறது.

கோயில் கருவறை, அர்த்த மண்டபம், முக மண்டபம் என்ற அமைப்புகளைக்கொண்டு விளங்குகிறது. கருவறையில் இறைவன் லிங்க வடிவில் உள்ளார். ஆவுடையார் சதுர வடிவில் காணப்படுகிறது. அர்த்த மண்டபத்தில் அழகிய வேலைப்பாடுடைய நான்கு தூண்கள் காணப்படுகின்றன. அர்த்த மண்டபத்தின் நுழைவாயிலை துவாரபாலர் சிற்பங்கள் அழகு செய்கின்றன. முக மண்டபத்தில் தெற்கு நோக்கிக் காணப்படும் அம்மன் சன்னதி முற்றிலும் சிதைவுற்றுக் காணப்படுகிறது. அங்கிருந்த அம்மன் அர்த்த மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது.

கருவறைத் தேவகோட்டங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. இடமிருந்து வலமாக வருவோமானால் முதலில் பிட்சாடன மூர்த்தியைக் காணலாம். இச்சிற்பத்தின் அருகில் ஒரு பெண் கரண்டியை ஏந்தி நிற்கிறாள். அவளின் காலருகே பானைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. பிட்சாடனரின் வலப்புறம் ஒரு சிறு மாடத்தில் அழகிய பிள்ளையார் சிற்பத்தையும் காணலாம். அடுத்துக் காணப்படும் தேவகோட்டத்தில் தட்சிணாமூர்த்தி சிற்பம் முழுவதுமாக தேய்ந்து காணப்படுகிறது. மேற்குத் தேவகோட்டத்தில் திருமாலின் சிற்பம் உள்ளது. சிற்பத்தின் தலைப் பகுதியில்

இருபுறமும் சாமரமும், கால்களின் அருகே இருபுறமும் விளக்குகளும் காணப்படுவது ஒரு தனிச் சிறப்பாகும். தேவகோட்டத்தின் மேலே காணப்படும் மகர தோரணத்தின் நடுவே கிருஷ்ணன் உரியிலிருந்து வெண்ணை திருடும் காட்சி புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப் பட்டுள்ளது. வடக்குத் தேவகோட்டங்களில் பிரம்மா, துர்க்கைச் சிற்பங்களைக் காணலாம்.

கருவறையின் கீழ்ப்பகுதி உபானம், முப்பட்டைக் குமுதம், பட்டிகை, வேதிகை என்ற உறுப்புகளைக் கொண்டுள்ளது. முப்பட்டை குமுதத்திற்கு மேல் கண்டப்பகுதியில் சிறு பலகைச் சிற்பங்களைக் (*Panel Sculptures*) காணலாம். சிவபெருமானின் தட்சிணாமூர்த்தி, கஜசம்காரமூர்த்தி, ஆடவல்லான் கோலங்களும், நடனமாடும் பெண்கள், இசைக்கருவிகளை வாசிக்கும் அடியவர், நந்திதேவர் ஆகிய உருவங்களும் எழிலாக விளங்குகின்றன. கருவறையின் மேலே காணப்படும் கொடுங்கைக்குக் கீழ் பூத கணங்கள் பல்வேறு இசைக்கருவிகளை வாசித்து நம்மை மகிழ்விக்கின்றன. விமானம் செங்கற்களால் கட்டப்பட்டு, சுதை சிற்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

இக்கோயிலில் முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன், வீரராசேந்திர சோழன் ஆகியோரது கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. முதலாம் இராசராசசோழனின் 8, 12, 13, 14, 19 மற்றும் 26-ஆவது ஆட்சியாண்டுகளைச் சார்ந்த கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. சோழமாதேவிக் கல்வெட்டுகளில் "தென்கரை பிரம்மதேயம் ஸ்ரீ சோழமகாதேவிச் சதுர்வேதி மங்கலம்" என்று அழைக்கப்படுகிறது. இராசராச சோழனின் 19-ஆவது ஆட்சி ஆண்டு கல்வெட்டிலிருந்து "தென்கரை பாண்டி குலாசனி வளநாட்டு பிரம்மதேயம் ஸ்ரீ சோழமகாதேவி சதுர்வேதி மங்கலம்" என அழைக்கப்படுகிறது.

இறைவன் "ஸ்ரீகையிலாய முடையார்", "ஸ்ரீகையிலாயத்து பரமேசுவரர்" என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். இக்கோயிலுக் களிக்கப்பட்ட பல்வேறு கொடைகளைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன வீரசோழ இளங்கோவரையர் தேவியார் பராந்தகன்

ஆதித்த பிடாரியார் என்பவர் இக்கோயிலுக்குக் கொடையளித் துள்ளார். இவ்வூர் மத்யஸ்தன் (கிராம கணக்கு அலுவலர்) ஏறன் கூத்தாடி என்பவன் இக்கோயிலுக்காக நந்தவனம் அமைத்துத் தந்துள்ளான். அதிலிருந்து மல்லிகை, இருவாச்சி, செண்பகம் மற்றும் பல பூக்கள் கிடைத்தன. நந்தவனத்தைப் பராமரிப்பதற்காக 'நந்தவனப்புறமாக' நிலம் அளிக்கப்பட்டது. சோழமாதேவிச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் 'ராஜராஜன்' என்று அழைக்கப் பட்ட பேரம்பலத்தில் கூடி இக்கோயில் உமாபட்டாரகிக்காக அமுது செய்தருள நிலம் அளிக்க எடுத்த முடிவையும் ஒரு கல்வெட்டு கூறுகிறது. இக்கோயிலில் அர்ச்சனை முதலியவைகளை செய்தவர் களை 'ஸ்ரீ கோயிலுடையார்கள்' என கல்வெட்டுக் குறிக்கிறது. மேலும் இவ்வூரில் 'வீரசோழ விண்ணகர் பெருமானடிகள்' கோயில் இருந்ததாக இராசராச சோழனின் 15-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டால் அறிய முடிகிறது. திருமால், ஸ்ரீதேவி, பூதேவி ஆகியோரது வழிபாட்டிற்காக தானமளிக்கப்பட்டது. தற்பொழுது இவ்வூரில் பெருமாள் கோயில் ஏதுமில்லை. இவ்வூரின் தென்மேற்குப் பகுதியில் ஓடும் உய்யக்கொண்டான் வாய்க்காலின் கரையில் ஒரு பகுதியை 'பெருமாள் துறை' என அழைக்கின்றனர். இங்குதான் முன்பு பெருமாள் கோயில் இருந்திருக்க வேண்டும் என ஊரார் கூறுகின்றனர். அவர்களுடைய கூற்றுக்கேற்ப வாய்க்காலில் கோயிலின் கட்டடப் பகுதிகளை ஆங்காங்கே காணமுடிகிறது. சோழமாதேவி ஊரின் நடுவில் ஒரு மரத்திற்குக் கீழ் பாதி புதையுண்ட திருமால் சிற்பம் காணப்படுகிறது இதன் அருகே உடைந்த நிலையில் தேவியரின் சிற்பங்களும், லட்சுமி நாராயணரின் சிற்பமும் காணப்படுகின்றன. இச்சிற்பங்களின் வடிவமைப்பை நோக்கும் பொழுது இவற்றை கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம். எனவே இச்சிற்பங்களே கல்வெட்டில் குறிக்கப்படும் வீரசோழ விண்ணகர் பெருமானடிகள் கோயிலில் வைத்து வழிபட் டனவாதல் வேண்டும். இக்கோயிலில் ஐந்து சகோதரர்கள் சேர்ந்து உவச்சுப்பணி செய்ய இறையிலியாக நிலம் தானமளிக்கப்பட்டுள்ளது. உவச்சுப்பணி தடைபடுமானால் நில வருவாயிலிருந்து கோயில் விளக்கிற்கு எண்ணெய் கொடுக்கப்பட வேண்டும் என கல்வெட்டு குறிப்பதைக் கண்டு மகிழலாம். சோழமாதேவி வகையார் ஊரின்

வடக்கில் இருந்த 'ராசராசன்' என்ற பெயருடைய தண்ணீர் பந்தலில் கூடி திருமால் கோயிலிலும், கைலாசநாதர் கோயிலிலும் 'பஞ்சமகா சபதம்' செய்ய ஒரு உவச்சனுக்கு 'உவச்சப்புறமாக' நிலம் அளித்துள்ளனர். இக்கல்வெட்டில் கரடிகை, மத்தளம், சங்கு, காளம் ஆகிய இசைக்கருவிகள் குறிப்பிடப்படுவது நோக்கத் தக்கது.

முதலாம் இராசேந்திர சோழனின் இரண்டு மற்றும் மூன்றாவது ஆட்சி ஆண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. இராசேந்திர சோழன் பிறந்த திருவாதிரை நட்சத்திர நாளைப் பிரதான திருநாளாகக் கொண்டு, ஆண்டுதோறும் சித்திரை மாதம் ஏழு நாட்கள் திருவிழா கொண்டாடப்பட்டது.

பின்னர் வீரராசேந்திர சோழனது கல்வெட்டில் இக்கோயிலில் பிரதிபகம் ஆகிற வார்த்திகம் படிப்பதற்காக விருத்தியாக நிலம் அளிக்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது.

கல்வெட்டுகளிலிருந்து இவ்வூரில் ஓடின வாய்க்கால், நிலங்களின் பெயர்கள், மண்டபங்களின் பெயர்கள் முதலிய செய்திகளை அறிந்து கொள்கிறோம்.

இவ்வூரில் சப்தமாதர் கோயிலும், அய்யனார் சிற்பமும் காணப்படுவதிலிருந்து இவ்வூரின் பழஞ் சிறப்பை அறிந்துகொள்ளலாம்.

சோழமாதேவி சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த ஒருவன் திருவானைக் கோயிலின் அருகில் உள்ள திருப்பலாத்துறை கோயிலில் விளக்கு எரிக்க தானமளித்ததாக அக்கோயிலில் காணப்படும் விக்கிரமசோழன் கல்வெட்டு கூறுகிறது. மேலும் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு மெய்க்காப்பாளராகவும், திருப்பரிசாரகம் செய்யவும் ஆட்களை அளித்த ஊர்களில் ஒன்றாக சோழமாதேவிச் சதுர்வேதி மங்கலம் தஞ்சைக் கோயில் கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. எனவே அக்காலத்தில் இவ்வூர் சிறப்பான ஒரு இடத்தைப் பெற்று விளங்கியிருக்க வேண்டும் என அறிய முடிகிறது.

முதலாம் இராசராச சோழனுக்குப் பல தேவியர்கள் இருந்தனர். அதில் சோழமகாதேவி என்ற தேவி தஞ்சைக் கோயிலுக்கு ஆடவல்லான், உமா பரமேசுவரியார், ரிஷபவாகனதேவர், கணபதியார் ஆகிய செப்புத் திருமேனிகளைச் செய்தளித்தும் அவைகளுக்கு வேண்டிய அணிகலன்களைச் செய்தளித்தும் பெருந் தொண்டு செய்திருக்கிறாள். அத்தகைய சிறப்புவாய்ந்த தேவியின் பெயராலே 'சோழமகாதேவி சதுர்வேதி மங்கலம்' என்ற இவ்வூரை அமைத்து கலையழகு மிக்க இக்கோயிலையும் இராசராச சோழன் அமைத்திருப்பானோ என்று கருதத் தோன்றுகிறது.

———

# வெண்பக்கோட்டை செப்பேடு

டாக்டர் எஸ். எம். கமால்

பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கம் பிற்கால பாண்டிய பேரரசின் வீழ்ச்சியைப் பறைசாற்றியது. அதனை தொடர்ந்து எழுந்த மதுரை சுல்த்தான்களது ஆதிக்கத்தை அகற்றிய விஜயநகர பேரரசின் பிடிப்பு பாண்டிய நாட்டில் வலுத்தது. மதுரையின் ஆளுநராக பணி ஏற்ற விசுவநாத நாயக்கர் (கி.பி. 1529-64) விஜயநகர பேரரசின் அடித்தளத்தை அங்கு உறுதிப் படுத்தினார். அவரால் புகுத்தப்பட்ட பாளையப்பட்டு ஆட்சி அமைப்பில் தமிழரல்லாத வடுகரும், கன்னடியரும் பெருமளவு பங்கு கொண்டனர். தமிழகத்தின் வடக்கே விஜயநகரப் பகுதியில் வாழ்ந்த வடுகர் மட்டும் அல்லாமல், தொண்டை மண்டல வேளாளர் களும் கொங்கு நாட்டு வாணர்களும் பாண்டி மண்டலத்தில் பரவ லாக குடிபுகுந்தனர். அவர்களில் பெரும்பாலோர் நாயக்கர், ரெட்டிகள், கம்பளத்தார் என்ற பிரிவினர் ஆவர்.

இவர்களில் வடபகுதி வடுகரில், மிகவும் பின்தங்கிய வகுப்பின ரான தொட்டியர், அனுப்பர், கம்பிலியர் என்ற ஒன்பது பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கம்பளத்தார், கம்பளத்து நாயக்கர், கோடங்கி நாயக்கர், ஒன்பது கம்பளத்தார் என இவர்கள் ஆங்காங்கு அழைக்கப் படுகின்றனர். இவர்களில் கம்பிலியர் பிரிவினர் மட்டும் கவண்டன் என்ற விகுதியுடன் வழங்கப்படுகின்றனர். இவர்களுக்கும் கொங்கு நாட்டு வேளாளர் கவுண்டருக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை. இவர்கள் பேசும் மொழியும் கன்னடம் ஆகும். ஏனைய வடுகர்களைப் போல இவர்களும் துங்கபத்திரை ஆற்றுப்பகுதியில் இருந்து தமிழகத்தில் குடிபெயர்ந்தவர்கள் என மதுரைச்சீமை வரலாறு குறிப்பிடுகிறது. ஆனால் மதுரைச் சீமையின் வளமான பகுதியான கம்பம் பள்ளத்தாக்கை விசுவநாத நாயக்கர் கைப்பற்றி கன்னடக் கவண்டரை அங்கு பாளையக்காரராக நியமித்ததால்

அண்டை மாநிலமான கர்நாடகத்தில் இருந்து தங்களது ஆநிரைகளுடன் மதுரை சீமைக்குள் குடியேறி பின்னர் பல இடங்களுக்கும் இதே மக்கள் பரவினர் என்று கொள்ளுதலே பொருத்தமானது.

இவர்களில் ஒரு பகுதியினர், இன்னும் சற்று தெற்கே சென்று, வெண்பக்கோட்டை என்ற பழமையான ஊரில் குடியேறினர். இந்த ஊரினை பாண்டியன் மாறன்சடையனது கல்வெட்டு ஒன்று "துடையலூர் முட்டத்து வெண்பைக்குடி" என குறிப்பிடுகிறது. சுமார் நானூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் அந்த மக்களிடம் "இனவரியினை" தண்டல் செய்து தன்னைக் கவண்டர்களது தலைவனாக ஆக்கிக் கொள்ள, சிறுபாலை அச்சராமகவண்டர் என்பவர் முயற்சி ஒன்றை மேற்கொண்டார். அப்பொழுது மதுரையில் ஆட்சி புரிந்த வீரப்ப நாயக்கரது (கி.பி. 1572-95) நிருபம் பெற்றுக் கொண்டபின் ஊழியக்காரன் ஒருவனுடன் திருநெல்வேலி சென்று அங்கிருந்த அரசர் அதிவீரராமபாண்டியனிடம் தனது நோக்கத்தை தெரியப்படுத்தினார். அவரது ஒப்புதலையும் பெற்ற பின்னர், வெண்பக்கோட்டை "கவண்டர் ராசாவையன்" புல்லக் கவுண்டரைச் சந்தித்து இனவரி தண்டல் பற்றி பேசினார். அதற்கு புல்லக்கவண்டர் இணங்கவில்லை என்றாலும் அச்சராமக் கவுண்டரது பயணம் மற்றும் செலவுகளுக்காக ஆயிரத்து ஐந்து பொன் கைக்கூலி கொடுத்து அவரைத் திருப்பி அனுப்பி விட்டார்.

இதனை அறிந்த மற்ற கவுண்டர்கள் அனைவரும், புல்லக் கவண்டருக்கு எழுதிக் கொடுத்த ஒப்புமுறி ஒன்று அண்மையில் சாத்தூர் வட்டம் சங்கரபாண்டியபுரம் கள ஆய்வில் கண்டுபிடிக்கப் பட்டது. கன்னட தேசத்து திருமலையான் என்பவர் வரைந்த இந்த முறியை "குண்டாத்துக்கரை கொண்டப்பன்க் கவண்டர், வடபட்டி மல்லப்ப கவண்டர் திருமலைக் கவண்டர், கோதண்டராம கவண்டர், தென்சீமை குறியக் கவண்டர், கல்லாத்தங்கரை கம்பளத்தார் மற்றுண்டான கம்பளத்தாரும் புல்லக் கவண்டருக்கு ஒப்பிட்டு எழுதிக் கொடுத்துள்ளனர். "வில்லுக்கு ஒரு பணம் போட்டு" புல்லக் கவண்டருக்குக் கொடுக்க அவர்கள் இணங்கியுள்ளனர். வீட்டிற்கு ஒரு பணம் என்றாற்போல வில்லுக்கு ஒரு பணம் என்ற வழக்கு வந்துள்ளது.

பொதுவான நோக்கில், இந்தப் பட்டயம் ஒரு சாதாரண ஒப்பு முறியாக இருந்தாலும் சில முக்கிய செய்திகளைத் தெரிவிக்கும் வரலாற்றுத் தடயமாகவும் இது விளங்குகிறது. முதலாவதாக, தமிழ்ச் சமுதாயத்தின் மிகச் சிறுபான்மையினரான இந்தக் கவண்டர்கள், 16-ஆம் நூற்றாண்டில், "............இராமேசுவரத்திற்கு கிழக்கு தாம்பரபரணிக்கு வடக்கு, தென்காசிக்குக் கிழக்கு, குண்டாத்துக்கு தெற்கு" என்ற இந்த நான்கு எல்லைக்கு உட்பட்ட பகுதியில் குடியேறியிருந்த விவரத்தை (வரிகள் 2-4) தெளிவாகத் தெரிவிக்கின்றன. அடுத்து, பாண்டிய மண்டலத்தின் கீழ்ப்பகுதியில் தொகுதியாக வாழ்ந்த இவர்களது இயல்பான வாழ்க்கையில் அன்னியர் தலையீடு இருக்கக்கூடாது என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்திருக்கிறது. ஒருவேளை இந்த தலையீடு அவர்களது கூட்டு வாழ்க்கையைப் பிளவுபடுத்த உதவும் என்ற உள்ளுணர்வு காரணமாக இருந்திருக்க வேண்டும். மதுரைக்குச் சற்று வடக்கே உள்ள சிறுபாலை அச்சராம் கவண்டர் அவர்களது இனத்தவராக இருந்தும்கூட, இனவரி தண்டல் செய்ய முயன்ற அவரது தலைமை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

மேலும், சாதாரண குடிமக்களான அவர்களது இதயத்தில் மிகக் கொடிய பழியுணர்வு படர்ந்திருந்தது என்பதைக், "குத்திப்போடுவோமாகவும், கொள்ளையிட்டுப் போடுவோமாகவும், வீட்டில் மாடெலும்பு கட்டிப் போடுவோமாகவும், சாதிக்கு பிறம்பு பண்ணி தீய்த்துறை தண்ணீர்த்துறையை மாத்தியும்" என்ற பட்டயத் தொடர்கள் (வரிகள் 21-23) புலப்படுத்துகின்றன. உயிருள்ள மாட்டைத் தெய்வமாக கொண்டாடியும், உயிரற்ற அதன் சடலத்தை மரியாதையுடன் புதைத்தும் வந்த அந்த மக்களது வீட்டில் மாட்டின் எலும்பைக் கட்டிப்போடுவது, அந்த வீட்டின் புனிதத்தைப் பங்கப்படுத்தும் செயலாக இருந்தது என்ற செய்தியும் இந்த செப்பேட்டின் வாயிலாக தெரியவருகிறது.

இந்த செப்பேட்டில் கரையேறி, தட்டி விச்சது என்ற அருஞ்சொற் பிரயோகங்களும், தீய்த்துறை (மயானம்), தண்ணீர்த்துறை (கேணி, குளம், ஆறு) பிறம்பு (வெளியே), கிறுத்தவம் (இடைஞ்சல்) என்ற வட்டார வழக்குகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த

முறியில், பிறசோற்பதி ஆண்டு ஆனி மாதம் 5-ஆம் நாள் என்று மட்டும் வரையப்பட்டுள்ளது. ஆனால் சகாப்தத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை. மதுரை வீரப்ப நாயக்கரது ஆட்சியில் பிறசோற்பதி ஆண்டு கி.பி. 1574-இல் வந்திருப்பதால், இந்த செப்பேடும் அதே ஆண்டைச் சார்ந்ததாக கொள்ளலாம். (இந்தச் செப்பேடு சாத்தூர் வட்டம் சங்கரபாண்டியபுரம் கூட்டுறவு வங்கி மேலாளர் திரு. எஸ். பாலசந்திரன், எம் ஏ., அவர்களிடம் உள்ளது.)

இதோ அந்தச் செப்பேட்டின் முழுமையான நகல்.

## முதல் பக்கம்

1 பிறசொற்பதி ஆனி மாதம் ரு உ வெண்பக்கொட்டை புல்லக்கவண்டருக்கு சாதியார் அனைவரு

2 ங் கூடி ஒப்பு முறிப்பட்டைய மெழுதிக் குடுத்தொம் குண்டாத்துக்கு தெக்கு ரொமெசுரத்

3 துக்கு மெற்குத் தாம்பிறவெனிக்கு வடக்குத் தென்காசிக்குக் கிளக்கு யிந்த நாங்கெ

4 ல்கை குள்ப்பட்ட கம்பளத்துக் கவண்டர்களாவது கூத்திபாறைசந்தைய் செ

5 காண்டப்பக் கவண்டர் கெச்சண கொண்டப்பக் கவண்டர் வடபட்டி மல்லப்பக் கவ

6 ண்டர் மாறனெறி திருமலைக் கவண்டரு மகனாரு மல கோதண்டராமக் கவண்டர் குண்டா

7 த்தங்கரை யிலுள்பட்டக் கவண்டர்களும் தென்சீமைக் குறியக் கவண்டரும் கல்லா

8 த்தங்கரையிலுள்ப்பட்டக் கவண்டர்களும் இந்த நாங்கெல்கைக்குள்ப்பட்ட பெரனைவ

9 ருங்கூடி ஒப்பிட்டு பட்டைய மெழுதிக் குடுத்தபடிக்கு சிறுபாலை அச்சராமக் கவண்டர் வீர

10 ப்பனாயக்கரையனைக் கண்டு குண்டாத்துக்குத் தெக்குச் சாதியுள்பட்ட கம்பள

11 த்தாரை யின வரிவாங்க வேனுமென்று னாயக்கரைய னருபமும் வாங்கி யூளிய

12 க்காறரையுங் கூட்டிக் கொண்டு அதிவீரராமராசா வையன் பண்டாரத்திருமுன் வந்

13 து கரையெறினபடியினாலெ யிது காரியந்துக்கு வெண்பக்கொட்டை புல்லக்கவண்டர்ர

14 ாசாவையன் பண்டாரத் திருமுன்னெ கரையேறி இனவரிக்கு வந்த அச்சராமக்கவண்ட

15 ருடனெ பெசியினவரி தட்டிவிச்சதெ யுண்டானால் புல்லக்கவண்டர் பண்டாரவா

16 தத்துக்குப் பரிதான

மறு பக்கம்

17 மாக ஆயிரம் பொன் அஞ்ன்று பொன்கைக்கூலி குடுத்துச் சிலவிட்ட சம்மந்தமெல்லா மிந்த நாங்கெ

18 கல்கைக்குள்பட்ட சாதியாரெல்லாருங்கூடி வில்லுக் கொரு பணம் வரிப்பொட்டு புல்லக்கவ

19 ண்டருக்கு யிருத்துக் குடுபொமாகவும் இந்தபடிக்கு ஒப்பிட்டுக் கூடினகம்பளத்திலெ யாதா

20 மொருதன் அச்சராமக்கவண்டருடனெ கூடினதெ உண்டானா லவனை மெலக்கொட்டை வா

21 சலிலெ குத்தி கிளக்கொட்டை வாசல்லெ யிகுத்துப் பொடுவொமாகவும் அவன் வீட்டையுங் கொ

22 ள்ளையிட்டுப் பொடுவொமாகவும் அவனைச் சாதிக்கு யிறம்பு பன்னி தியத்துறைத் தண்ணீர்த்து

23 றையம் மாத்தி யவன் வீட்டிலெ மாடெ லும்புங் கட்டிவிப்பொமாகவும் இந்த நாங்கெல்கைக்குளிப்ப

24 ட்ட சாதியாரெல்லாரும் கொண்டாடப்பட்ட குல
தம்பிரானானை யொர் சான்வயன பண்டாரப்பா

25 தத்தானையெ னாயக்கரையன் பாதத்தாணையெ சாதியார்
தப்பாது யிதுக்கு

26 யாதொருவாகிலும் கிறுத்தவம் பண்ணினால்க் கெங்க
கரையிலக் காராம்பசுவைக் கெ

27 கான்ற தொசத்திலெ பொவாராகவும் இந்த படிக்கு
வெண்பக்கொட்டை புல்லக்கவண்டரு

28 க்கு ஒப்பிட்டு பட்டையமெளுதிக் குடுத்தொம்
குண்டாத்தங்கரைக்குக் கொண்டப்பக் கவண்

29 டர் வடபட்டி மல்லப்பக் கவண்டர் திருமலைக்கவண்டர்
கொ

30 தண்டராமக் கவண்(ட)ர் மற்றுண்டான கம்பளத்துக்
கவண்டர்களுந் தென்சீமைக்குறி

31 யக் கவண்டரும் கல்லாத்தங்கரையில்ச்
செந்த கம்பளத்தாரு யிருப்படி இவர்கள் செ

32 ாலல சாதியாருடைய ஒப்புபட்டய மெளுதினென்
கன்னாடக தெசம் திரும

33 லையன் எளுத்து உ - ள வ 7 - ப உ ய - -

# நேமம் சேவகப் பெருமாள் ஐயனார்

மா. சந்திரமூர்த்தி
பதிவு அலுவலர், சென்னை

தேவர் திருமகன் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நேமம் கிராமத்து கண்மாயின் வடகரையில் இயற்கையான சூழலில் அமைந் துள்ளது சேவகப் பெருமாள் ஐயனார் கோயில். இக்கோயில் வெள்ளைக் கற்களைக் கொண்டு முழுமையான கற்றளியாக எடுக்கப்பட்டுள்ளது. இக்கோயில் வடிவில் சிறியதாக இருப்பினும், செம்மையாக அமைக்கப்பட்டுள்ளது. கருவறை, முகமண்டபம் பலிபீடம், பரிவார ஆலயங்கள் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. கோயிலுக்கென்று தனியாகத் திருச்சுற்று மதிலோ, அல்லது இராஜகோபுரமோ எடுக்கப்படவில்லை. எனினும் கோயில் எளிய தோற்றத்துடன் விளங்குகிறது.

## கருவறை

கோயில் கருவறை சதுர வடிவுடையது. இக்கோயில் அதிட்டானம் முதல் பிரஸ்தரம் வரை வெள்ளைக் கல்லும், அதன் மேலுள்ள சிகரம் செங்கல்லும் சாந்தும் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இக் கோயில் உபானம், ஜகதி, கண்டம், பட்டி, வேதிகை ஆகிய அதிட்டான வர்க்கங்களைக் கொண்டுள்ளது, கோயில் கருவறையைச் சுற்றிலும் தேவகோட்டங்கள் இல்லை. கபோதக் கூடுகளில் சிகரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. யாளி வரியின்றி எளிமையான தோற்றமளிக் கிறது.

## ஒரு தள விமானம்

இக்கோயில் ஒருதள விமானத்தையுடையது. விமானக் கோட்டங்களில் நான்கு திசைகளிலுமுள்ள மாடங்களில் ஐயனாரின் சுதை உருவங்கள் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறது. அவற்றின் பக்கங்களில் ஐயனாரின் வாகனமான யானை நிறுத்தப்பட்டுள்ளது.

விமானத்தின் வேதிப்படையில் வாளேந்திய பூதகணங்கள், நாற்றிசையையும் காத்து நிற்கின்றன. சிகரம் எண்பட்டைகளைக் கொண்ட திராவிட சிகரமாக அமைந்து விளங்குகிறது. அதன் மேலுள்ள ஸ்தூபி உலோகத்தாலானது.

### முகமண்டபம்

கருவறையின் முன்புறம் முகமண்டபம் உள்ளது. முகமண்டபத்தை முன் வரிசையில் இரு தூண்கள் தாங்கி நிற்கின்றன. முகமண்டபத் தூண்கள் மேலும், கீழும் நடுவிலும் சதுரமாக அமைந்து இடையேயுள்ள பகுதி எண்பட்டையுடன் காணப்படுகிறது. முகமண்டபத் தூண்கள் காலத்தால் பழமையானவை. இத்தூண்களின் நடுப்படைகளில் பாண்டியர்கால கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ விக்கிரம பாண்டிய தேவருடைய எட்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் இரண்டு இத்தூண்களில் காணப்படுகின்றன. கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டிய மன்னரது வரலாறு கூறும் தூண்களாக இவை விளங்குகின்றன.

### சேவகப் பெருமாள் ஐயனார்

கருவறையின் நடுவே ஐயனார், பூரணி, புஷ்கலை ஆகியோரின் சிற்ப வடிவங்கள் வழிபாட்டில் உள்ளன. ஐயனார் இடதுகாலைக் குத்திட்டு, வலது காலைத் தொங்கவிட்ட நிலையில் இரு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் வீற்றிருக்கிறார். வலது கை, வளைந்த செண்டைக் கடக முத்திரையில் பற்றியுள்ளது. இடக்கை குத்திட்டுள்ள முழங்கால் மீது பக்கவாட்டில் நீண்டுள்ளது.

ஐயனாரின் தலையைப் பக்கங்களில் விரிந்து சுருண்ட கேசங்களையுடைய அனல் மகுடம் அலங்கரிக்கிறது. நெற்றியின் முன்புறம் சுருண்ட கேசங்கள் வனப்பூட்டுகின்றன. காதுகளில் பத்ர குண்டலங்கள் அணி செய்கின்றன. தோள்களில் தோள் மாலை சரிந்துள்ளது. மேற் கையில் தோள் வளையும், முன் கையில் காப்பும் உள்ளன. மேல் வயிற்றைச் சுற்றிலும் கல் முத்துக்கள் பதித்த உதர

பந்தமும், இடது தோளிலிருந்து கீழ் வயிறு வரை முத்து தரித்த பட்டையான அங்கியும் அணி செய்கின்றன.

ஐயனாரின் இடுப்பிலிருந்து தொடைவரை வட்டுடை இடைக் கச்சையாகக் கட்டப்பட்டுள்ளது. இடைக் கச்சையின் முன்புறம் கச்சையின் ஆடைக்கட்டு சரிந்து வனப்பூட்டுகிறது. இடுப்பையும், இடது முழங்காலையும் பட்டையான இடைவார் இணைக்கிறது. காலில் தண்டையும், பாதசரமும் அலங்கரிக்கின்றன.

பெருமிதமான முகப்பொலிவுடன் கூடிய இவ்வுருவத்தின் உருவமைதி, அமர்ந்துள்ள கோலம், அங்கங்களின் அமைப்பு, ஆடை அணிகளின் தன்மை, கையிலுள்ள செண்டாயுதம் ஆகியவற்றின் அமைப்பைக்கொண்டு, இதனைப் பிற்கால பாண்டியர் சிற்பமாகக் கருதலாம். இங்குள்ள தூண் கல்வெட்டுக்களின் துணைக் கொண்டும், சிற்ப அமைதியைக் கொண்டும் இதனை விக்கிரம பாண்டியர் காலமான கி.பி. 13-ஆம் நூற்றாண்டு சிற்பமாகக் கருதலாம். இவ்வுருவம் 64 செ.மீ. உயரமும், 38 செ.மீ. அகலமும் உடையது.

### பூரணி

ஐயனாரின் வலப்புறம் உயர்ந்த பீடத்தின் மீது வலது காலை மடித்து, இடது காலைத் தொங்கவிட்டு, இரு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காணப்படும் பூரணியின் வலது கை வலது முழங்கால் மீது அமைந்துள்ளது. இடது கை தாமரை மலரைப் பிடித்துள்ளது. கரண்ட மகுடம், பத்ர குண்டலம், தோள் மாலை, முத்தாரம், புரிநூல், இடைக்கச்சை, தோள்வளை, காப்பு, தண்டை, பாதசரம் ஆகிய அணிகள் பூரணியை அணி செய்கின்றன. இதன் உயரம் 53 செ.மீ., அகலம் 27 செ.மீ. உடையது.

### புஷ்கலை

ஐயனாரின் இடப்புறம் இரு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் புஷ்கலையின் உருவம் காணப்படுகிறது. பூரணிக்கு மாறாக இவ்வுருவம் இடது காலை மடித்து, வலதுகாலைத் தொங்கவிட்டு,

வலது கையில் அல்லி மலர் பிடித்து, இடக்கையை முழங்கால் மீது வைத்துக் காணப்படுகிறது. தலையில் கரண்ட மகுடமும், காதில் ஓலைத் தோடும், தோளில் தோள் மாலையும், கழுத்தில் முத்தாரமும், மார்பில் புரிநூலும், தோள்களில் வளையும், முன் கையில் காப்பும், இடையிலிருந்து கணுக்கால் வரை அலை அலையான மடித்த ஆடையும், காலில் தண்டையும், பாதசரமும் அழகு செய்கின்றன. இதன் உயரம் 53செ.மீ., அகலம் 28 செ.மீ உடையது காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு. பிந்திய பாண்டியர் கலையைச் சேர்ந்தது.

இம்மூன்று உருவங்களும் ஒரே காலத்தில் ஒரே சிற்பியால் செதுக்கப்பட்டுள்ளதை இதன் அமைப்பைக்கொண்டு அறிய முடிகிறது. விக்கிரம பாண்டியன் காலத்திய ஐயனாரின் சிற்பத் தொகுதியை அடையாளம் காண இவ்வுருவங்கள் மிகவும் துணை புரிகின்றன. ஐயனாரின் வாகனமான யானையின் உருவமும் உள்ளது. இவை பிற்காலத்தியவை.

### பரிவார ஆலயங்கள்

ஐயனார் கோயிலின் தென்கிழக்கு மூலையில் ஐயனாரின் பரிவாரங்களான பெரிய கருப்பரும், சின்னக் கருப்பரும் உள்ளனர். பெரிய கருப்பர் வலது கையில் வெட்டு அரிவாளைப் பிடித்து, இடது கையை நீண்ட கதையின்மீது வைத்து வடதிசை நோக்கி நின்ற கோலத்தில் காத்து நிற்கிறார். தலையின் இடப்புறம் சரிந்த கொண்டையும், முகத்தில் முருக்கிய மீசையும், அகன்ற நாசியும் இமையாது விரித்த கண்களும், விரிந்த மார்பும், அகன்ற தோளும் கொண்டு கம்பீரமாகக் காட்சியளிக்கிறார். காதில் பளுவான கடுக்கணும், மார்பில் பதக்கமும், தோளில் வளையமும், முன்கையில் காப்பும், இடையிலிருந்து தொடைவரை கச்சையும், காலில் கழலும் கொண்டு விளங்கும் இவ்வுருவம் 107 செ.மீ. உயரமும், :6 செ.மீ அகலமும் உடையது. காலம் 18-19-ஆம் நூற்றாண்டு.

### சின்னக்கருப்பு

இது உருவில் சிறியது. இவ்வுருவம் வலது கையில் வெட்டு அரிவாளைப் பிடித்து; இடது கையில் வளரி என்று அழைக்கப்படும்

வளைந்த போர்க்கருவியைப் பிடித்த வண்ணம், கம்பீரமாகக் காத்து நிற்கிறது. தலையில் இடப்பக்கம் சரிந்த மதுரைக் கொண்டையும், பரந்த முகத்தில் மீசையும், செவிகளில் மாட்டலும், கழுத்தில் பெருமணிகள் கோத்த பதக்கமும், இடையில் கச்சையும் மணிகள் கோத்த இடைவாரும், காலில் காப்பும் அலங்கரிக்கின்றன.

இடையின் முன்புறம் குறுவாள் செருகப்பட்டுள்ளது. கிராமியக் கலைப் பாணியை வெளிப்படுத்தும் இவ்வுருவம் கி.பி. 18-19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் உயரம் 89 செ.மீ., அகலம் 33 செ.மீ. உடையது.

பரிவார தெய்வங்கள் அமைந்துள்ள மண்டபத்தை ஆறு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்கள் சோழர் காலத்தவை. இவ்வூர் சிவன் கோயிலுக்குரிய இத்தூண்களின் மேலும், கீழும், நடுவிலும் சதுரமாக அமைந்து இடையேயுள்ள பகுதி எண் பட்டை யுடன் காட்சியளிக்கிறது. இத்தூண்களின் நடுப்படைகளில்

1 இலிங்கத்திற்குப் பால் சொரியும் பசு
2 இலிங்கத்தினை நாவால் நக்கும் ஆநிரை
3 மறவனைக் கீழே கிடத்தி மிதிக்கும் மதங்கொண்ட களிறு
4 சிவலிங்கத்தைத் தொட்டு பூசை செய்யும் அரசன்
5 அழகுடைய அன்னம், ஆகிய உருவங்கள் செதுக்கப் பட்டுள்ளன.

இங்கு இலிங்கத்தை வணங்கிய நிலையில் தோன்றும் இரு மானிட உருவங்கள் உள்ளன. இவ்வுருவங்களின் அமைப்பு, முகப்பொலிவு, முடியை அணிசெய்யும் மகுடம், இடையில் அணிந்துள்ள ஆடை யாவும் பேரரசன் உருவினை நினைவுறுத்துவதாக அமைகின்றன. இச்சிற்பத்தூண்கள் சோழர் காலத்தைச் சார்ந்தவை. (கி.பி. 10, 11 ஆம் நூற்றாண்டு) இவ்வூர் கோயிலை ஆதியில் தோற்றுவித்து இலிங்க பிரதிஷ்டை செய்த ஜெயங்கொண்ட சோழனான இராஜ ராஜனது உருவினை நினைவுபடுத்துவதாக அமைகிறது.

இவ்வூர் சிவன் கோயில் கால வெள்ளத்தால் சிதைந்து விடவே அக்கோயிலுக்குரிய தூண்களும், அதிட்டானம் மற்றும் கபோத

வர்க்கங்களும், பிற்காலக் கட்டடப் படைப்புகளில் இணைக்கப்பட்டு விட்டன எனத் தெரிய வருகிறது.

## மழை வழிபாடு

மழையில்லாத காலத்தில் ஐயனார் கருவறை வாயிலை அடைத்து, ஐயனாரின் உருவம் நீரில் மூழ்கும் அளவிற்குத் தண்ணீரை நிரப்பி வைப்பார்கள். அவ்வாறு மூன்று நாட்கள் ஐயனாரைத் தண்ணீரில் குளிர வைப்பர். மூன்று நாட்களுக்குப் பிறகு, ஐயனாருக்குப் பூசை செய்து தண்ணீரைத் திறந்து விடுவர். இவ்விதம் ஐயனாருக்குத் தண்ணீர் கட்டினால் மழை பொழியும் என்ற நம்பிக்கை கிராம மக்களிடம் இருந்து வருகிறது.[1] இவ்வழக்கு இன்றும் நடைமுறையிலிருந்து வருகிறது.

---

1 தகவல் :- க. சுப்பிரமணிய பட்டர் - ஆர்க்காடு, அழகு நாச்சியம்மன் கோயில் பூசாரி.

# பாண்டிக் கோவையும், பாண்டியன் முதலாம் இராஜசிம்மனும்

**டாக்டர் எஸ். குலசேகரன்**

அகப்பொருள் பற்றிய சிற்றிலக்கிய வகைகளுள் முதன்மையானது ,கோவை'. இது முழுவதும் கட்டளைக் கலித்துறைகளால் இயற்றப் படுவது வழக்கம். மாணிக்கவாசகரால் அருளப்பட்ட திருச்சிற்றம்பலக் கோவையார் கோவை இலக்கிய வகைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. இறையனார் அகப்பொருள் உரையில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டவையே கோவை வகைகளுள் மிகப் பழமையானதாக வேண்டும். இதே செய்யுட்களுள் சிலவற்றை எடுத்துக்காட்டி இவற்றை பாண்டிக் கோவையைச் சார்ந்தனவாக களவியற் காரிகை உரை கூறிச்செல்கிறது. இவ்வரிய செய்தியை முதன் முதல் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களே அறிந்துரைத்தார். இவர் ஆலோசனைக்கிணங்க பாண்டிக் கோவை பாடல்களாகத் தெரியவரும் *350* செய்யுட்களைத் திரட்டிக் குறிப்புரையுடன் அறிஞர் வே. துரைசாமி அவர்கள் முதன் முதல் 1957-இல் பதிப்பித்தார்.[1] நந்திக் கலம்பகம் போலப் பாண்டிக் கோவையும் ஒருவரலாற்றுச் சிறப்புடைய நூல்.

பாண்டியர்கள் சடையன் எனவும், மாறன் எனவும் மாறி மாறிப் பெயர் புனைந்திருக்கவும்,[2] பாண்டிக் கோவை முழுவதிலும் மாறன் என்ற பெயர் மட்டுமே காணப்படுகிறது. மாறர்களை மட்டும் இது தன் பாட்டுடைத் தலைவர்களாகத் தேர்ந்து கொள்ள நியாயமில்லை யாதலால், இது ஒரு குறிப்பிட்ட மாறனைப் பற்றியதே ஆகல் வேண்டும். அதிசயன் *(47, 85)*, அரிகேசரி *(32* பாடல்கள்*)*, இரணாந்தகன் *(158)* இரணோதயன் *(349)*, உசிதன் *(18* பாடல்கள்*)* கலிமதன் *(202, 322)* கலிமதனன் *(216, 355)* சத்துருதுரந்தரன் *(178, 199, 223, 225)* பராங்குசன் *(3, 13, 29, 38, 80, 91, 102, 105, 135,*

*144, 262, 293, 302, 335)* வரோதயன் *(39, 95, 104, 114, 116, 116, 125, 240, 294, 336)*, விசய சரிதன் *(180, 267, 327)* விசாரிதன் *(15* பாடல்கள்*)* என இந்நூலில் வழங்கும் பன்னிரண்டு விருதுப் பெயர் களும் இதனையே வலியுறுத்துகின்றன.

இவன் வீரசாகசம் செய்த இடங்களாக ஆற்றுக்குடி, இருஞ்சிறை, கடையல், களத்தூர், குளந்தை, கோட்டாறு, சங்க மங்கை, செந்நிலம் சேவூர், தூவை, நறையாறு, நெடுங்களம், நெல்வேலி, பாழி, பூலந்தை, மணற்றி (மங்கை), முசிறி (செ. 95), வல்லம், விழிஞம், வெண்மாத்து ஆகிய 20 (போர்க்) களங்கள் கூறப்படுகின்றன. இவற்றுள் கடையல் *(26)*, கோட்டாறு *(262, 269)* சேவூர் *(16, 48, 109, 132, 182)* நறையாறு *(66, 323)* பூலந்தை *(111, 165)* விழிஞம் *(319)* ஆகிய ஆறு இடங்களில் சேரனை எதிர்த்துப் போரிட்டது வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது. வானவன் மாறன் *(71, 82, 150, 153, 156, 212, 248, 329)* என்ற பெயரிலும் சேர பாண்டிப் போரின் குறிப்பைக் காணலாம். பாடல்கள் 33, 75-இல் வேணாட்டாரோடு பொருதது கூறப் பட்டுள்ளது. குளந்தை தாமிரபரணிக் கரையில் உள்ள வைணவத் திருப்பதிதான். கடையல் என்பது திருநெல்வேலிப் பக்கத்ததான கடையநல்லூர் ஆகலாம். நெல்வேலியை திருநெல்வேலியாகவே கூடக் கொள்ளலாம். பாழியும் 105, 281, 330, 345-ஆம் பாடல்களில் தென்பாழி என்றே கூறப்படுகிறது. சங்கமங்கை சங்கரமங்கை என்பதன் குறுக்கமாகில் இவ்விடத்தில் (பராங்குச) பாண்டியன் பல்லவனைப் புறங்கண்டதாகச் சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள்[3] கூறலால், இது சோணாட்டினதாகக் கூடும். எனவே, இப் பாண்டியன் பல்லவரோடும் பொருதிருக்க வேண்டும். புகார் *(11, 33, 59, 63, 65, 193)* கோழி *(17)* உறந்தை *(130, 211)* எல்லாம் இவனுக்கு உரியனவாகக் கூறப்பட்டிருப்பதாலும், நேரியன் *(83, 96, 164, 232, 259)* நேரியன் மாறன் *(232)* செம்பியன் மாறன் *(235, 338)* காவிரி நாடன் *(52, 141. 170)*, (புனல் நாடன் (10 பாடல்கள்) பொன்னி நாடன் *(343)* ஆகிய தொடர்களின் வழக்காலும் இஃது உறுதிப்படுகின்றது. கோழியும், வானவன் வஞ்சியும் கொண்டவ னாக பாண்டியன் பாடல் 17-இல் புகழப்படுகிறான். பாடல்கள்

5, 308-இல் கொங்கு நாடும், வேறு பலவற்றில் கொல்லியும் பாடப் பட்டிருப்பதால் கொங்குப் பகுதி இவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது தெளிவாகின்றது. பாடல்கள் 215, 316-இல் அள நாட்டில் பகைவர் முறியடிக்கப்பட்டது கூறப்படலால், கொங்கு நாட்டார் தாக்குதல் இந்த அளநாட்டுப் பக்கம் நிகழ்ந்ததாகக் கருதலாம்.

பாண்டிக் கோவையின் பாட்டுடைத் தலைவன் யார்? - இது ஒரு முக்கியமான வரலாற்றுப் பிரச்சனை. மேலே கூறப்பட்ட செய் திகளைச் செப்பேட்டுச் செய்திகளோடு ஒப்பிட்டு நோக்கியே ஒரு தீர்வு காணவேண்டும். பாழி, செந்நிலம், மற்றும் நெல் வேலிப் போர்கள் சம்பந்தர் காலத்திய அரிகேசரி மாறவர்மன்[4,5] திறத்திலும் கூறப்படுகின்றன. சம்பந்தர் காலப் பாண்டியன் நெல் வேலியில் வடபுலத் தெவ்வரை எதிர்த்துப் போரிட்டதாகவே சேக்கிழார் கூறுகிறார். ஆனால், பாண்டிக் கோவையின் தலைவன் ஆகிய நெடுமாறனோ நெல்வேலிப் போரை சேரனை எதிர்த்துச் செய்ததாகவே பாண்டிக் கோவையின் போக்கிலிருந்து தென்படுதல் முன்னமே கூறப்பட்டது. வில்லவனை நெல்வேலியில் ஜடில பராந்தகனின் தந்தை புறங்கண்டதாக சின்னமனூர் பெரிய செப்பேடு கூறுகின்றது. இரண்டாவதாக, பாண்டிக் கோவை கூறும் விழிஞப் போர் சம்பந்தர் காலப் பாண்டியன் செய்ததாக எங்குமே கூறப்பட வில்லை. இக்காரணம் பற்றி பாண்டிக் கோவையை சம்பந்தர் காலத்தியதாகக் கொள்ளப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார்[6] கூட உடன்படவில்லை. மூன்றாவதாக, அரிகேசரிப் பெயர் சம்பந்தர் காலப் பாண்டியனுக்கு வேள்விக்குடி செப்பேட்டிலும், இவன் பெயரன் ஆகிய முதலாம் ராஜசிம்மனுக்கு பராங்குசப் பெயர் சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டிலும் காணப்படுகின்றன. பாண்டிக் கோவைப் பாண்டியனுக்கு இரண்டு பெயர்களுமே உண்டு. எனினும், அரிகேசரிப் பெயரை பாட்டனுடையது என்ற வகையில் பராங்குசன் தரித்திருத்தல் கூடியதேயாகையால், அரிகேசரி, பராங்குசனை நாம் சம்பந்தர் காலத்தவனாகக் கோடல் பொருந் தாது. பாழி, செந்நிலம், மற்றும் நெல்வேலிப் போர்கள் பலமுறை நடந்திருப்பதை ஆய்வேளிர் ஒவ்வொரு தலைமுறையிலும் பாண்டிய ரோடு போரிட்டு வந்திருப்பதிலிருந்தும் ஊகிக்கலாம்.

'சோழன், சுடர்முடி வானவன், தென்னன்' - என (செ. 125) கோவையில் பாண்டியன் கூறப்படுமாறு போலவே, வேள்விக்குடிச் செப்பேட்டில் ராஜசிம்மன் கோழி, வஞ்சி, கூடல் என்னு மாடமா மதில் (நகர்), புதுக்கியதாகச் சொல்லப்பட்டுள்ளான். கோவையில் கொங்கு நாடு பாண்டியனுக்கு உரியதாகக் கூறப்படுதற்கேற்ப (செ. 5, 308), வேள்விக்குடிச் செப்பேட்டில்[7] ராஜசிம்மன் கொங்கு நாட்டுப் பாண்டிக் கொடுமுடி சென்று பசுபதி பதுமபாதம் பணிந்து ஏத்தியதாகச் சொல்லப்பட்டுள்ளான். கோவை 286-ல் இவன் சிவபெருமான் திருவடிகளைச் சென்னிக் கணிந்த சிறந்த சிவனடியார் ஆகவும் சொல்லப்படுகிறான். காவிரி நாடன், புனல் நாடன், பொன்னி நாடன், நேரியன் மற்றும் புகார், கோழி, உறந்தைக் குரியவன் என்றெல்லாம் பாண்டியன் கோவையில் வருணிக்கப் படுவது கூறப்பட்டது. பல்லவனைப் புறங்கண்டிருந்தாலே இது சாத்தியம் ஆதல் தெளிவு. ஆனால், சம்பந்தர் காலப் பாண்டியனின் கல்வெட்டுக்கள் எதுவும் சோணாட்டில் இல்லாதது மட்டுமல்ல எந்தச் செப்பேட்டிலும் இவன் சோணாட்டை ஆட்சி செய்தமைக்கான குறிப்புக் கூட இல்லை. பெரிய புராணத்துள்ளும் குலச்சிறை நாயனாரின் மணமேற்குடிக்கு வடக்கே வேற்று நாடாய் இருந்ததால், பாண்டியன் சம்பந்தர் பெருமானிடம் விடைகொண்டதாகவே உள்ளது. சீவரமங்கலச் செப்பேடுகளில்[8] ராஜசிம்மன் 'பல்லவ பஞ்சனன்' என வருணிக்கப் படுகிறான். இஃது, இவனே பல்லவரோடு மோதிய முதற் பாண்டியன் ஆதலைத் தெளியக் காட்டுகிறது. இன்னும், முதலாம் ராஜசிம்மனுக்கு வேள்விக்குடிச் செப்பேட்டில் கூறப்படும் 'மான்றேர் மாறன்' என்ற பெயரோடு ஒற்றுமைப்பட்ட 'மான்றேர் வரோதயன்' - என்ற தொடர் பாண்டிக் கோவையில் பயில்கின்றது. (செ. 24, 33, 45, 64, 89, 318, 315) ஐந்தாவதாக, பராங்குசப் பெயர் முதலாம் ராஜசிம்மனுக்கு மட்டும் சின்னமனூர் பெரிய செப்பேட்டில் வழங்கப்பட்டுள்ளது. அனைத்திற்கும் மேலாக, வேள்விக்குடிச் செப்பேட்டை ஜடில பராந்தகனின் மூன்றாம் ஆட்சி ஆண்டில் வரைந்தவன் பெயர் ஆகிய 'வரோதய பட்டன்' என்பது பராந்தகனின் தந்தை ஆகிய முதலாம் ராஜசிம்மனுக்கு வரோதயப் பெயர் இருந்ததை அடித்துக் கூறுகின்றது. இவற்றால் பாண்டிக்

கோவையின் பாட்டுடைத் தலைவன் முதலாம் ராஜஸிம்மனே எனத் துணிந்து கூறலாம். இவனுக்கிருந்த அரிகேசரிப் பெயரை இவன் தன் பாட்டனைப் பார்த்து தரித்துக் கொண்டான் ஆகல் வேண்டும். சின்னமனூர்ப் பெரிய செப்பேடு குறிப்பிடும் பராங்குசப் பெயரும் இவனுக்கும் இருப்பதால், இவனை நாம் அரிகேசரி பராங்குச ராஜசிம்மன் என அழைக்கலாம்.

வேள்விக்குடிச் செப்பேட்டில் நெடுவயல், குறுமடை, மண்ணிக் குறிஞ்சி, திருமங்கை, பூவாளூர், கொடும்பாளூர், குழும்பூர், பெரியலூர் ஆகிய எட்டு இடங்களில் முதலாம் ராஜசிம்மன் போரிட்டது குறிப் பிடப்பட்டுள்ளது. முறியடிக்கப்பட்டவன் பல்லவ மல்லன் என்பதும் கூடத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. கங்க—சாளுக்கியர்களை வெண்பைப் போரில் தோற்கடித்தது சீவரமங்கலச் செப்பேட்டில் காணப்படுகிறது. இவற்றுள் எதுவும் பாண்டிக் கோவையில் இல்லை. இவற்றினும் தாழ்ந்த வெற்றிகளே கோவையில் பெரி தெடுத்துப் பேசப்பட்டுள்ளன. எனவே, ராஜசிம்மன் இவற்றைத் தன் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் செய்திருக்க வேண்டுமென்பது தெளிவு.

கி. பி. 733-இல் விக்ரமாதித்தனால் காஞ்சியிலிருந்து துரத்தப் பட்ட பல்லவமல்லன், பிறகு கி.பி. 745 அளவில்தான் காஞ்சியில் பேரரசன் ஆனான் எனப் பேராசிரியர் மகாலிங்கம்[9] நிறுவி யுள்ளார். இந்த இடைக் காலத்தில் இவன் தங்கியிருந்தது சோணாட்டிலேயே என்பதை நாம் நமது ‘ஆழ்வார்கள் காலநிலை’ யில்[10] உறுதியாக நிறுவியுள்ளோம். கி.பி. 733—745-க்கு இடைப்பட்ட காலத்தேயே பல்லவருக்கு வெற்றியைத் தந்ததாக உதயேந்திரம் செப்பேடுகள் கூறும் பாண்டி பல்லவப் போர்களும், பாண்டியருக்கு வெற்றியைத் தந்தனவாக வேள்விக்குடிச் செப்பேடு கள் கூறும் பாண்டி-பல்லவ போர்களும் நிகழ்ந்திருக்கக் கூடும். பல்லவர்களோடு முதன் முதல் மோதிய பாண்டியன் என்ற வகையில் ‘பல்லவ பஞ்சனன்’ எனப்பட்ட முதலாம் ராஜசிம்மனின் ஆட்சிக் காலம் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார்[11] கருதுமாறு போல

கி.பி. 740-767 ஆகில், ராஜசிம்மன்-பல்லவ மல்லன் போர்கள் கி.பி. 740-745க்கு இடைப்பட்டனவாகல் வேண்டும். பாண்டி-பல்லவ போர்களுக்கே இக்கால அளவு போதியதாகாத நிலையில், இதற்கு முன் நடைபெற்றிருக்க வேண்டும் என நாம் மேலே காட்டிய பிற செய்திகளுக்கு எப்படி இடம் பிடிப்பது? எனவே, செப்பேடுகள் குறிப்பிடும் ராஜசிம்மன் பல்லவ மல்லனின் போர்கள் கி.பி. 745-க்குப் பிற்பட்டன என்றோ (அல்லது) முதலாம் ராஜசிம்மனின் ஆட்சித் தொடக்கம் கி.பி. 740-க்கும் மிக முந்தியதென்றோதான் கொள்ள வேண்டும்.

ஸ்ரீபர என்ற பெயரோடு மீன் இலச்சினையும் பொறித்த ஒரு காசு கிடைத்துள்ளது. ஸ்ரீபர என்பது ராஜசிம்ம பல்லவனின் பெயராதலால் இக்காசு பாண்டியன் மேற்கொண்ட வெற்றியைக் குறிக்க ராஜசிம்மனால் வெளியிடப்பட்டதாகக் கருதப்படுகிறது.[12] கி.பி. 720-இல் ராஜசிம்மனாகிய இரண்டாம் நரசிம்மவர்மனை சீன நூல்கள் தென்னாட்டின் பேரரசனாகக் கூறுகின்றன.[13] எனவே, கி.பி. 720- அளவிலேயே பல்லவ ராஜசிம்மன் பாண்டியனை வென்று கொண்டிருக்ககூடும் என்பது வெளிப்படை. சாஸ்திரியார் கருத்துப்படி இக்காலப் பாண்டியன் கோச்சடையன் ரணதீரன் ஆவன், இவனுடைய ஆட்சிக் காலமாக இவர் குறிப்பிடும் கி.பி. 710-740க்கு, இது இடைப்பட்டதாய் இருப்பதால், பெருவீரனாய் வேள்விக்குடிச் செப்பேட்டில் வருணிக்கப்படும் கோச்சடையன் ரணதீரனுக்கு தோல்வியைக் கொடுத்த கி,பி. 720 பாண்டி-பல்லவப் போரை ஏற்றியுரைப்பது சரியாகத் தோன்றவில்லை. இது வேறொருவனின் அதாவது ராஜசிம்மனின் ஆட்சித் தொடக்க மாதலே பொருத்தம். சின்னமனூர் கல்வெட்டில் கூறப்படும் மாறஞ் சடையனின் 46-ஆம் ஆட்சியாண்டு முதலாம் ராஜசிம்மனுடையதே யாகில், கி.பி. 720 இவன் ஆட்சி தொடக்கமும் ஆகக் காண்கிறோம். வெங்கையாவின் குடிவழிப்படி, 46-ஆண்டு நீட்டமுடைய ஆட்சிக் காலம் ராஜசிம்மனுக்கே பொருந்தும் எனில், பாண்டிய ராஜசிம்மன் பல்லவரைத் தோற்கடித்தது கி.பி. 728-இல், பல்லவ ராஜசிம்மன் மறைந்த பிறகே ஆகக் கூடுதலால், பல்லவர் மேற்கொண்ட

வெற்றியைக் குறிப்பாக உணர்த்தும் பாண்டிக் கோவையின் காலத்தை உத்தேசமாக கி.பி. 730 ஆகக் கொள்ளலாம்.

அடிக்குறிப்புகள்

1 பாண்டிக் கோவை - பதிப்பாசிரியர் : துரைசாமி, வெ. ஸ்டார் பிரசுரம். 72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5, (1978).

2 ARE 1907 of P.51

3 பாண்டியர் செப்பேடுகள் பத்து - தமிழ் வரலாற்றுக் கழகம், 22, கிரீன்வேஸ் ரோடு, சென்னை-28, (1967) பக்கம் 141-146, 160-166, 172-176, (சின்னமனூர், பெரிய செப்பேடு).

4 The Pallavas, Dubreil. G.T. (1917).

5 Historical Sketches of Ancient Dekhan, Subramanya Aiyer, K.V. Vol. I

6 மேற்கோள் 1, K. A. N. சாஸ்திரி முன்னுரை

7 மேற்கோள் 3, பக். 1-18, 33-77, 44-48 (வேள்விக்குடிச் செப்பேடு).

8 மேற்கோள் 3, பக். 49-55, 63-64, 67-69 (சிவரமங்கலச் செப்பேடு).

9 Kancheepuram in the Early History of Southern India, Mahalingam T.V. Asia Publishing House, Madras, (1986) p. 169.

10 வைணவத்தின் ஆழ்வார்கள் கால நிலை - டாக்டர் S. குலசேகரன், E11, 3, 16-வது குறுக்குத் தெரு, பெசன்ட் நகர் சென்னை-90.

11 Pandyan Kingdom, Nilakanta Sastri, K.A., Swathy Publication.

12 Administration and Social life under Pallavas, Minakshi, K. Madras University, (1939).

13 S.I.I. Vol. 14 No. 78 (சின்னமனூர், லட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் கல்வெட்டு).

———

# திருமலை நாயக்கர் பற்றிய மெக்கன்சி சுவடிகள்

**டாக்டர் ம. இராசேந்திரன்**

துணை இயக்குநர், மொழிபெயர்ப்புத்துறை

## திருமலை நாயக்கர்

'உயர்ந்த உருவம், பருத்த உடல், பெருத்த தோள்கள், சரிந்த தொந்தி, கடைந்த மூக்கு, முறுக்கிய மீசை - இவை திருமலை நாயக்கரின் வடிவம்' மதுரையை ஆண்ட நாயக்கர்கள் பதின்மூன்று பேர்களில் முன்னே அறுவரும், பின்னே அறுவருமாக நடுநாயகமாக ஆட்சி புரிந்தவர் திருமலை நாயக்கர். வரிசையில் மட்டுமின்றி அரசாட்சி வாழ்க்கையிலும் நடுநாயகமாகத் திகழ்ந்தவர்.

கி.பி. 1584ஆம் ஆண்டு திருமலை சவுரி நாயினு அய்யிலுகாரு என்னும் முழுப்பெயருடைய திருமலை நாயக்கர் பிறந்தார். 1623-இலிருந்து ஆட்சிப்பொறுப்பில் சின்னத்துரையாக இருந்தார். 1627-இல் தமது 43-ஆவது வயதில் ஆட்சி பீடத்தில் அமர்ந்த திருமலைநாயக்கர் தனது 75 வயது வரை (கி.பி. 1659 பிப்ரவரி வரை) அரசுபுரிந்து புகழ் நிறுவி மறைந்தார்.

வானளாவிய கோபுரங்களும், வசந்த மண்டபங்களும், தெப்பக் குளங்களும், கோயில்களும் காட்சிப் பொருட்களாக நின்று இன்றும் திருமலை நாயக்கரின் வரலாற்றிற்கும், புகழிற்கும் சாட்சிய மளிக்கின்றன. இவற்றோடு, கல்வெட்டுகளும், பட்டயங்களும், சுவடிகளும், இலக்கியங்களும் திருமலை நாயக்கர் புகழுக்கு அணி சேர்க்கின்றன.

திருமலை நாயக்கரின் மெய்க்கீர்த்தி பற்றியும், அவர் காலத்தில் நிகழ்ந்த பல அரிய நிகழ்ச்சிகள் பற்றியும், சிறப்பாக தொழி லாளர்கள் போராட்டம் பற்றியும், பிரச்சினைக்குரிய அவருடைய

மரணம் பற்றியுமான செய்திகளைத் தாங்கிய மெக்கன்சி சுவடிகள் இங்கு ஆய்வுக்கட்டுரைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

## மெக்கன்சி சுவடிகளில் திருமலை நாயக்கர்

கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பணிபுரிய வந்து தமிழுக்கும், நாட்டிற்கும் தொண்டாற்றியவர்களுள் காலின் மெக்கன்சி குறிப்பிடத் தக்கவராவார். பயிற்சிப் பொறியாளராக 1782-ஆம் ஆண்டு சென்னைக்கு வந்து சேர்ந்த மெக்கன்சி படிப்படியாக இந்தியாவின் முதல் தலைமை நில ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற்றார். தம் வாழ்நாள் முழுவதும் இந்த நாட்டின் வரலாறு, இலக்கியம், மதம், மக்களின் வாழ்க்கை முறை போன்ற பல்வேறு பொருட்கள் பற்றிய சுவடிகளையும், தொல்பொருட்களையும் சேகரித்து வந்தார். குறிப்பாகத் தமிழகத்தைப் பற்றிய வரையில் பாளையக்காரர்கள், நாயக்கர்கள் வரலாற்றிற்கு மெக்கன்சியின் சுவடிகள் பெரிதும் பயன் படுகின்றன.

மெக்கன்சியின் தொகுப்பில் உள்ள வரலாற்றுச் சுவடிகளுள்,

1. அந்தியூர் தாலுகா ஆரம்பள்ளி கணக்குபிள்ளை கைபீது (D. 2955)
2. அம்மைய நாயக்கனூர் ஜமீன்தார் வமிசாவளி (D. 3846)
3. தவசிமடு ஜமீன்தார் வமிசாவளி (D. 3843)
4. எறியோடு வல்லக் கொண்டம நாயக்கர் வமிசாவளி (D. 3012)
5. சுக்காம்பட்டி பாளையப்பட்டு ஜமீன்தார் வமிசாவளியும், பட்டையமும் (D. 3011)
6. விருபாட்சி பாளையப்பட்டு (D. 3259)
7. இராமகிரிப் பாளையக்காரன் சாமய நாயக்கன் வமிசாவளி (D. 2833)
8. மயிலாடி பாளையக்காரன் சின்னம நாயக்கன் வமிசாவளி (D. 2837)
9. திருமலை முத்துமாதா நாயக்கன் வமிசாவளி (D. 2846)

எனும் ஒன்பது சுவடிகளில் திருமலை நாயக்கர் பற்றிக் கூறப் பட்டிருக்கும் செய்திகளை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மெய்க்கீர்த்தி

திண்டுக்கல்லைச் சேர்ந்த சுக்காம்பட்டி ஜமீன்தார் பாலமுக் கொண்டு முத்தைய நாயக்கரிடத்தில் உள்ள பட்டையங்களிலிருந்து **1816-ஆம் ஆண்டு, ஜூலை 13-ஆம்** நாள் தரியாபத்து நிட்டல னாயன்னய்யன் என்பவர் நகல் எடுத்திருக்கிறார். அப் பட்டயத்தில்,

'ஸ்ரீமன் மகாமண்டலேசுவர, அகண்ட மண்டலாதி உத்தண்ட கோத்தண்ட மண்டலீகன்; கண்ட ஜண்டா பிறசண்ட மணிமகுட மார்த்தாண்ட கீர்த்திப் பிறதாப சபசலம் அமோக கிலமுகஞ் தனுஞ் சயாகில கண்டநாடு கொண்டு, கொண்டநாடு குடாதான், திருமலை ராய னாமதேய நவ மன்மதாகாற யோதனுயோத அஸகாய சூற கவிதா சாதுரிய கீர்த்தி பிறதாப மகுட மண்டலீசுவர திருமலை தேவராயர் அவர்கள்' என்று மெய்க்கீர்த்திப் பகுதி இடம் பெற்றுள்ளது.

## வாழ்க்கை நிகழ்ச்சிகள்

வரலாற்று நிகழ்ச்சிகளோடு, திருமலை நாயக்கர் வாழ்க்கையில் நிகழ்ந்ததாக பல சுவைமிக்க நிகழ்ச்சிகள் மெக்கன்சி சுவடிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## உணவில் மருந்து

திருமலை நாயக்கருக்கு அடங்கி வாழ்ந்த கோணமுத்து வல்லக் கொண்டம நாயக்கருக்குப் பகைவர்கள் உணவில் மருந்து கலந்த செய்தியை மெக்கன்சி சுவடி கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது.

'கற்தாக்களாகிய திருமலை நாயக்கர் அவர்கள் நாளையில் அவர் தளவாய் இராமப்பையர் அவர்கள் சமஸ்தாதிகாரமும் செய்து கொண்டிருக்கும்போது சுக்காம்பட்டியில் ராசதானியாய் பாலமுக் கொண்டு முத்தைய்ய நாயக்கரவர்கள் தம்பி கோணக்க முத்துவல்லக்

கொண்டம நாயக்கர் சிறு நாயக்கராகப் பட்டமாய் இருக்கும்போது ஷெ சுக்காம்பட்டி ஜமீன்தார் ஆகிய பாலமுத்தைய்ய நாயக்கர் வகையராப் பெண்டுகள் சிறு நாயக்கராகிய கோணமுத்து வல்லக் கொண்டம நாயக்கர் பேரில் விரோதமாய், இவர் சாப்பிடுகுற அன்னத்தில் மருந்து வச்சுக் கொல்லனும் என்று நினைச்சு பச்சனத்தில் வச்சி சாதம் வைக்கும்போது, யிவர் நித்தியமும் நாய்கள் பேரில் . . . . இருப்பார். அந்த நாயிகளுக்கு முன்னே சாதம் வச்சி பிற்பாடு, தான் சாப்பிடுகுறது. அந்த மேறைக்கே அன்னைக்கும் நாயிக்கு சாதம் வைக்கவும், அந்த சாதம் தின்னு அது அங்ஙன தானே செத்துப் போச்சுது. இத்தை இவர் பார்த்து இந்த சமாச்சாரம் பண்ணினது சொல்லுங்கள் என்று தான் சாப்பிடாமல் குதிரையேறிக் கொண்டு எறியோடு (ஈரோடு) வந்து சேர்ந்தார்'.

### பல்லக்கு தூக்கிகளுக்குப் பரிசு

'அப்போது மதுரையில் கர்நாடக துரையளாகிய திருமலை நாயக்கரவர்கள் திருசுரபுரத்துக்குப் போகவேண்டியதாய், அவர்கள் பல்லக்குப் போகிகளாகிய ஆணைக்கட்டி அக்கல போயளையும், குலவப்போய் அளையும் வரவழைத்து மூன்று நாளைக்குள்ளே போய் திரும்புவையா யென்று கேள்குறபோது, யெங்களாலே நிறுபாக மில்லை. அம்மைய நாயக்கர் ஸ்தானாபதியும் போகியளும் வந்திருக்கிறார்கள். அவர்களாலே ஆகுமென்று சொல்ல, அப்படியே திருமலை நாயக்கரவர்கள் யிடைத்துப் போகியளை நாகேட்க நல்ல தென்று பல்லக்குக் கொண்டு திருசுரபுரத்துக்குப் போய் மூன்று நாளையில் மதுரை வந்து சேர்ந்தார்கள். அப்போது போகியள் பேரில் ரொம்பவும் சந்தோஷப்பட்டு ரெங்கா ரெட்டியாரிடத்தில் சொல்லி வெகுமதியுஞ் செய்து சிறிது கிராமம் பூமி விட்டுக் குடுக்கச் சொல்லிச் சொன்னார்கள். யிவ . . . ம் அளக போயனும் கம்ப போயனும் கேட்டுக் கொண்டது. யெங்களுக்கு கிராமம் பூமி தேவை யில்லை. யென்னென்னைக்குஞ் சீவனம் நடந்து வரும்படியாய்த் தங்கையாறும் அதில்சேர்ந்த கேணியளும் பண்ணிமுட்டி முதல் வைகையாத்தில் விளாம்பட்டிக் கருப்பண்ணசுவாமி கோவிலுக்கு மேர் . . . . நெல்லித்தோப்பு வளுக்குப் பாறை வரைக்கும் மச்சங்கள் பிடித்துச் சீவனம் பண்ணும்படியாய் உத்திரவு குடுக்க வேணுமென்று

கேட்டார்கள். அந்தப்படியே கற்தாக்களாகிய திருமலை நாயக்கர வர்கள் தாமிர சாசனப் பட்டையத்தில் எழுதிக் கொடுத்து சீவனம் நடக்கும்படி செய்தார்.'

என்று மெக்கன்சி சுவடி குறிப்பிடுகிறது. இக்குறிப்புகளால் அக்காலத்தில் பல்லக்குத் தூக்கியவர்கள் விவசாயத்தின் மூலம் நிரந்தர வருவாய் கிடைக்காது என்று நம்பியிருந்ததும், தம் குலத் தொழிலாகிய மீன் பிடித்தலில் அவர்களுக்கிருந்த நம்பிக்கையும் தெளிவாகின்றன. இன்றும் பல ஊர்களில் கோயில்களில் சாமி தூக்குபவர்கள், அக்கோயிலைச் சேர்ந்த குளங்களில் மீன் பிடிக்கும் உரிமை உடையவர்களாக 'வலையர்' என்று அழைக்கப்பட்டு வருகின்றனர் என்பதும் நினைத்தற்கு உரியது.

## குதிரையை அடக்குதல்

திருமலை நாயக்கர் காலத்தில், இரும்பு முறிக்கிச் சாமய நாயக்கர் என்பவர் குதிரை ஒன்றை அடக்கியிருக்கிறார். அதற்காக திருமலை நாயக்கர் பரிசளித்து பாராட்டியிருக்கிறார். இச்செய்தியை,

'மதுரையில் மகாராஜ மானிய ராசஸ்ரீ திருமலை நாயக்கரவர்கள் ராச்சியபாரம் பண்ணிக் கொண்டுயிருக்கிறார்கள். ஷி இரும்பு முறிக்கிச் சாமய நாயக்கன் கெட்டிக்காரன், குதிரையை நல்லாகத் திருப்புவானென்று இவரை வரச் சொல்லி நிருபம் வந்துது. அப்போது மதுரைக்கி போயி மகாராஜ மானியராஜஸ்ரீ கற்தாக் களாகிய திருமலை நாயக்கரவர்களைக் கண்டு பேட்டிபண்ணி கொண்டதில் "நீய் நல்ல சேவுகன் குதிரையை நல்லாத் திருப்பு வாயென்று கேட்டிருக்கிறோம். குதிரை திருப்பவேணு"மென்று சொன்னதில் கற்தாக்களவர்கள் குதிரை அரமணை புதுசாகக் கட்டின மேல் மாடியின் பேரில் யிருந்து எழுவத்திரெண்டு பாளையக்காரரை வரவளைச்சு குதிரையைக் கொண்டுவந்து நிறுத்தி, யிந்தக் குதிரை வெகு அறமியாயிருக்குது. பாளையக்காரர் யேறித் திருப்பிக் கொண்டு வாருங்கோளென்று சொன்னதில் பாளையக்காரரெல்லாம் பார்த்து யெங்களாலே ஆகாதென்று சொன்னதில், யிரும்பு முறிக்கிச் சாமய நாயக்கர் அந்தக் குதிரையின் பேரில் யேறித் திருப்பிக்

கையிலிருந்த வரிச்சியைப் பூமியிலே போட்டதில் வருச்சு முச்சூடும் பூமியிலே புதைஞ்சு போயி, ஒரு சாண் நீளந் தெரிந்ததில், ஆன வரைக்கும் யிருக்குற பேர்களைப் பிடுங்கச் சொல்லிச் சொன்னதில் ஒருத்தரும் பிடுங்கமாட்டாமல் இவரைப் பார்த்து, "நீய் போட்ட வரிச்சு நீய்தானே பிடுங்கவேணுமென்று சொன்னதில் ஷெ குதிரையின் பேரில் தானே யிருந்துகொண்டு குதிரை வெகுவேகமாக வருகிறபோது கால் பெருவிரலினாலே யிடுக்கிப் பிடுங்கும்போது யெக்கி ஒரு பனைப் பிரமாணம் உயரம் வரிச்சுப் போயி மறுபடி குதிரை போட்டு கீளே வருச்சு விழுகு முன்னே கையில் பிடித்துக் கொண்டார். அப்போது கற்தாக்கள் பார்த்து சந்தோஷப்பட்டு சிறிது வெகுமதியுங் குடுத்து அந்த வருச்சுக்கு வெள்ளிக்கட்டும் போட்டுக்குடுத்து அண்ணு முதல் வெள்ளிக்கட்டிப் பாலாவும், பரசிங்க முத்துக் குச்சுங் குடுத்து நவராத்திரி கொலுவிருக்கச் சொல்லி உத்திரவு கொடுத்தார்கள்' என்று மெக்கன்சி சுவடி குறிப்பிடுகிறது.

## பெண் கடத்தலும், வேலை நிறுத்தப் போராட்டமும்

திருமலை நாயக்கர் காலத்தில், தொழிலாளர்கள் வீட்டுப் பெண்ணைக் கடத்திக்கொண்டு போனதை எதிர்த்து, அவர்கள் நிகழ்த்திய வேலை நிறுத்தப் போராட்டம் பற்றி ஒரு சுவடி விரிவாகக் குறிப்பிடுகிறது.

"யேளுசேரி மாக்கய நாயக்கன், பல்லக்க வாணன் சீமையிலே மனையனூரில் யெங்கள் பெண், அஞ்சுவயதுப் பெண், ஆத்தங் கரையில் விளையாடிக் கொண்டிருக்கிறபோது, இரத்தினகிரி யென் றொரு துர்க்கம் உண்டு. அந்த துற்கமாகப் பெற்றவன் வல்லகான் யெங்குற பட்டானி அவடத்துக்கு வேட்டைக்கி வந்து இந்த கம்மாழச்சியைக் கண்டு யெடுத்துக்கொண்டு போய், ரத்தினகிரி துர்கத்தின் மீதில் வைத்துக் கொண்டான். இந்த சமாச்சாரம் அஞ்சு சாதி பேரும் அறிந்து நாம் சும்மா இருந்தால் நம்மிடம் பட்டானி தீறப் போறதில்லை யென்று யோசித்து, கொல்லுவேலை, தச்சு வேலை, தட்டார் வேலை, ராயர்தேவர் சமூகமத்துக்காரர் வேலை யெல்லாம் நிறுத்தினபடியினாலே ஆறுமாய்ப் பதிக்கிமேல் ராயர் தேவர்க்கு அறிக்கையாச்சுது.

•

ராயர் தேவர் நம்மிட சமூகத்தில் காத்திருக்கப்பட்ட சோம சுந்தர ஆசாரி, குட்டகா அரிச்சந்திரசேகர ஆசாரி, குறுவாசாரி, வல்லப்பனாசாரி இவர்கள் அஞ்சுபேரையும் வரவழைத்து, காறு கானா வேலை முதல் மற்ற வேலை எல்லாம் நிறுத்த வேண்டிதென்ன வென்று கேழ்க்குமிடத்தில் னாங்கள் சொன்னது. யேளுசேரி மாக்கய நாயக்கன் சீமையிலே யெங்கள் சிரை ... ரத்தினகிரி துர்க மாளப்பட்ட வல்லயம்கான் எடுத்துக் கொண்டு போயிருக்கிற படியினாலே, அந்த சிரையைத் திருப்பித் துலுக்கன் தலையும் யெங்கள் இடத்துக்கு வந்து சேர்ந்தால் நாங்கள் உங்கள் சமஸ் தானத்தில் வருவோம்; அஞ்சு சாதி வேலையும் நடப்பி வைப்போம். இல்லாதிருந்தால் ... காறுக்கன் வேலைமுதல் ஒன்றும் நடக்க மாட்டாது. மானம் போயி உயிர் காவலா யென்று சொன்ன விடத்தில் அப்படியா என்று மகா கோபத்துடனே கெணஞ்சேறி மாக்கய நாயக்கரவரை வரவளைத்து, 'அடே' மாக்கய நாயக்கர் சீமையில் கம்மாழச் சிரையை, ரத்தினகிரி ... வலகான் எடுத்துப் போயி யிதுனேரம் வரைக்கும் அதே கானமிடத்தில் சொல்லாமல் போனதென்னவென்று மிகுதியும் கோபம்பண்ணி மாக்கய நாயக்கனைப் பார்த்து நீ யிந்த ரத்தினகிரி துர்க்கத்தை கைவசப் படுத்தி, வலசலகான் தலையை யிங்கே கொண்டுவந்து நம்மிட சமூகத்தில் முன்னே வைத்து நல்லா இருந்தால் உனக்கு சித்தம் நடக்கும், மிகுதியும் தாக்கீது ஆனவிடத்தில் அந்த நாயக்கரும் மிகவும் பயந்து சுவாமி ரத்தினகிரி பேரில் போயி தன்னையிந்த பாளையக்காரரும், தன்னுடைய தளங்களும் தானும் ரத்தினகிரி துர்க்கத்தின் பேரில் பாளையமிறங்கி, துலுக்கனோடே மல்ப்பொருதி மாக்கய நாயக்கன் நிறுவாகம் பண்ண மாட்டாமல் யேழுதரம் முறிஞ்சி, அவன் ஊருக்கு ஓடி வந்து ராயரவர் கேட்டு ... தன்னுடைய ராணுவமும் தானுமாயி போயி ரத்தினகிரி துர்க்கத்தின் பேரில் பாளையமிறங்கி சமர் நடத்திக் கொண்டிருக்கையில் கோமளாச்சி மகன், கருப்பாண்டி மகன் இவாள் ரெண்டு பேரும் காலாடிகளையும் ரத்தினகிரி துற்கைப் பட்டணம் துலுக்கனூர் பாளையம் யிதுவெல் லாம் சுத்திப்பாத்து சோதிக்கயில், யிப்படி ஒண்ணரை வருஷம் தன்னிடத்தில் சோதிக்குறபோது, ஒரு நாள் துற்கத்தின் பேரில் துலுக்கன் நித்திரையில் சோதிச்சி கருப்பாண்டி மகனும்

கோமளாச்சி மகனும் யேறிவிழுந்து துலுக்கன் தலையை அறுத்து நாலுச்சுத்து முன்னுக்கு வைச்சார்கள். கம்மாளச் சிரையையும் கைவசப்படுத்தி துலுக்கனுடைய சகல பிறுதும், முப்பத்திரெண்டு வகை பிருதுகளையும் பிடிங்கிக் கொண்டார் ... பின்னும் ராயர் பல்லாலுசித்து நாயக்கரைப் பாத்து அந்த கம்மாளச் சிரையை ஏழு வயசு கொளந்தையானபடியினாலே அதை நல்லது செய்து பாலு பாலெண்பதாயி யெடுத்துக் கொள்ள வேணுமென்று சொல்ல, அந்த மேரைக்கு நல்லாச்சிது கன்னார் சித்தன் மகனுக்கு அச்சோபனம் முடிச்சபடியினாலே ராயர் தேவர் யெங்கள் சனத்தினரையும் பாத்து பல்லாலு சித்து நாயக்கர் மானமும் பெத்துமகுக்கறத்தாற் சனங்கள் அவனுக்கு என்ன குடுக்கிறீரோ யென்று கேட்க, யம்மிடத்தில் யெங்கள் பிதாவாகையினாலே அஞ்சு ச்ாதி பட்டயம் குடுக்குறோ மென்று சம்மதித்தோம்.

கல்லுங் காவேரியும் புல்லும் பூமியுமுள்ள வரைக்கும் டில்லியர் கரைக்குள்பட்ட அஞ்சு சாதி பேரும் எழுவத்தினாலு கணம் கலியாணத்துக்குப் பத்துப் பணமும் வருஷத்தில் தலைக்கட்டுக்கு அஞ்சுபணமும், பிள்ளைக்குட்டி பள்ளன் கொசங்கி தலைக்கட்டுக்கு ஒரு பணமும் பாலாலு சித்தி நாயக்கரவர்களுக்கு சாதனங் குடுத்தோம். ஆகாச காணி பூமாதேவியாகிய நாங்கள் செய்த காரியத்தில் அஞ்சு சாதி எழுவத்தி நாலு கணமும் டில்லியர்கரைக் குள்பட்ட பெயர் தாமொருத்தனாகின் ஆடச் செயினக்கால் கங்கை கரையில் பசுவதை செய்த பாவத்தையும், கெர்ப்பினி வதை செய் தவன் போன பாவத்திலேயும் சிசுவதை செய்தவன் போன தோஷத் திலேயும், பிராம்மணன், சந்நியாசியை வதை செய்தவன் போன தோஷத்திலேயும், மாதுரு துரோகம், பிதுரு துரோகம், குரு துரோகம், சிவத்துரோகம் செய்தவன் போற தோஷத்திலேயும் போவான். இந்த அஞ்சு சாதி எழுவத்தி நாலு கணம் புத்திர பவுத்திர வங்கிஷா பாறம்பரியமுள்ள வரைக்கும் பாலாலு சித்தி நாயக்கருக்கு அருமைச் சாசனம் எழுதிக் குடுத்தோம்.'

இச்சுவடி குறிப்புகளிலிருந்து, அக்காலத்தில் தொழிலாளர்களிட மிருந்த ஒற்றுமையும், போராட்ட உணர்வும், அநீதியை எதிர்த்துப் பழிவாங்கும் போக்கும் தெளிவாக வெளிப்படுகின்றன. தங்கள்

பெண்ணுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்காக, தவறு செய்தவன் தலையையே வாங்கியிருக்கின்றனர். இவ்வாறு தங்களுக்கு நீதி வழங்க துணை நின்ற வீரனுக்கு அடிமைச் சாசனம் எழுதி கொடுத்ததிலிருந்து தங்களின் நன்றி உணர்ச்சியைக் காட்டியிருக்கிறார்கள். ச்சாசனத்தை மீறுபவர்கள் நரகத்தை அடைவார்கள் என்று நம்பியிருக்கிறார்கள். மேலும் தோஷங்கள், பாவங்கள், துரோகங்கள் என்று அவர்களிடமிருந்த நம்பிக்கைகளும், எண்ணங்களும் கூட இச்சுவடியால் வெளிப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு மேலாக செய்தி அறிந்ததும் திருமலை நாயக்கரே போர்க்களத்திற்குச் சென்றிருக்கிறார் என்ற செய்தி அவருக்குரிய புகழுக்கு அணி செய்கிறது.

## திருமலை நாயக்கரின் மறைவு

திருமலை நாயக்கரின் மரணம் குறித்து மூன்று வகையான கதைகள் வழங்கி வருகின்றன. பட்டர் மனைவியருடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பதால் அவரைக் கொலை செய்துவிட்டார்கள் என்பது முதலாவது கதை. கோயில் நிலவறையில் மன்னரை வைத்துப் பெருங்கல்லால் வாயிலை மூடி வெளியே வரமுடியாமல் கொலை செய்து விட்டனர் என்பது இரண்டாவது கதை. திருமலை நாயக்கர் கிறித்துவ மதத்திற்கு ஆதரவாக இருந்ததோடு, தானும் சேர்ந்து விட்டதைப் பொறுக்காத பட்டர்கள் சூழ்ச்சிக்குப் பலியானார் என்பது மூன்றாவது கதை.

இம்மூன்று கதைகளுமே மறைந்த நாயக்கர் குல நாயகனுக்குப் பெருமை சேர்ப்பனவாகவும் இல்லை; உண்மை கூறுவனவாகவும் இல்லை. இவற்றை மறுத்து திருமலை நாயக்கர் இயற்கை மரணம் தான் எய்தினார் என்பதை நிறுவ மெக்கன்சி சுவடி சிறந்த சான்றாகிறது. அதனால்தான் சத்தியநாதய்யர் உட்பட மெக்கன்சி சுவடிக் கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இதுபற்றி,

'பாளையம் சகிதம் புறப்பட்டு கணவாய்க்கிக் கீழ்ப்பட்ட கெடியளையெல்லாம் கைவசமாய்ப் படுத்திக்கொண்டு, மயிசூர் சமுஸ்தான்த்தின் பேரில் போயிறங்கி சமுஸ்தானத்தையும் கைவசப் படுத்திக் கொண்டு வருகுற முன்னுக்கு திருமலை நாயக்கர் அவர்கள் தெய்விகமாயும் போனார்கள் என்றும் 'மயிசூரார் பாளையம்

வந்து யிறங்கி திண்டிக்கல் வரைக்கும் வியாபிச்சதில் திருமலை நாயக்கரவர்கள் தம்பி முத்துராச நாயக்கரவர்கள் யென்குறவர் சகல தளத்துடனே வந்து திண்டுக்கல்லுலே வந்து யிறங்கி பாளையப் பட்டாரை யெல்லாம் சேகரித்துக் கொண்டு மைசூர் வரைக்கும் முடிக்கி விட்டு வருகுறதுக்குள்ளாக யிவடம் மதிரையில் திருமலை நாயக்கர்வர்கள் தைவிகமாயி போனதில் மதுரையிலிருந்து துஷ்ட சாமாஜிகள் முத்துவீரப்ப நாயக்கருக்குப் பட்டம் கட்டி வைச்சிப் போட்டார்கள் என்றும் மெக்கன்சி சுவடிகளில் அவர் இயற்கை யான மரணம் அடைந்தார் என்று குறிப்பிடப்படுகிறது. மேலும் மெக்கன்சி சுவடிகளுக்கு அட்டவணையும், சிறந்தவற்றிற்கு ஆங்கில மொழி பெயர்ப்பும் செய்த வில்லியம் டெய்லர் என்பார் தம் அட்ட வணையிலும் திருமலை நாயக்கரின் மறைவு இயற்கையானது என்பதைப்பற்றி குறிப்பிடுகிறார்.

திருமலை நாயக்கரின் மறைவு பற்றிய அனைத்துச் செய்தி களிலும், மறைவுக்குப் பின்னர் படையெடுத்துச் சென்றிருந்த முத்துராச நாயக்கர், அரசுரிமை பெறவேண்டி வெகுண்டதாகக் குறிப்புகள் வருகின்றன. திருமலை நாயக்கரின் மறைவு கொலை யாக நிகழ்ந்திருக்குமெனில் திருமலை நாயக்கரின் மகனும் அதற்கு உடந்தை என்றும், முத்துராச நாயக்கரும் அதுபற்றிக் கவலையற்று பதவிபெற விரும்பினார் என்றும் பொருள்பட இடம் ஏற்படுகிறது. ஆனால் இவற்றிற்கெல்லாம் எதிராக திருமலை நாயக்கருக்கு 16-2-1659ல் மரணம் நிகழ்ந்திருக்கிறது. அவரது 75 வயதும் அக் கதைகளைப் பொய்யாக்கி விடுகிறது. மெக்கன்சி சுவடிக் குறிப்பும் அவரது புகழைக் காப்பாற்றியிருக்கிறது.

## முடிவுரை

ஓர் அரசனின் வரலாறு என்பது, அவன் போரிட்ட ஆண்டுகளும், போரிட்ட ஆட்களும், கட்டிய கோயில்களும், காட்டிய கருணையும் மட்டுமல்ல; இவற்றோடு அரசனுக்கும், மக்களுக்குமிருந்த உறவு களும், அரசனுடைய பிரச்சினைகளுக்கு மக்கள் கருவியாவதைப் போன்று, மக்கள் பிரச்சினைகளில் அரசன் காட்டிய பரிவும் வெளிப் படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் வரலாறு முழுமை அடையும். இவ்வகையில் திருமலை நாயக்கரின் வரலாறு முழுமை யடைய மெக்கன்சி சுவடிகள் துணை நிற்கின்றன.

# COINS OF VALENTINE AND ARCADIUS

**Natana. Kasinathan**
Director

It is now an established fact that the Tamils had trade relations with Rome from 2nd century B.C. to 5th century A.D. This fact is built up on one part on the basis of the literature as well as the cronicles of foreign travellers, and on the other on the basis of the discoveries of Aeries and Dinaries of Roman kings found both in Kerala and Tamilnadu.[1]

Roman coins from Republican times (123 B.C. to 91 B.C.) to Zeno period have been occurring in Kerala and Tamilnadu in considerable numbers. The Iyyal hoard and the Kottayam hoard of Roman coins threw valuable light on the trade contacts that prevailed in those days. The important role played by the ports of Tondi and Muciri on the western coast is attested by the above discoveries. In Tamilnadu also we get hoards of Roman coins from the period of Augustus who ruled in the last quarter of the Ist century B.C. and in the first quarter of the first century A.D. These occurred mostly in Coimbatore District since the Western traders landed on the western coast and came through the Palghat pass into Tamilnadu. Coins of Augustus were discovered at Vellalur, Pollachi, Karur. First discovery of Roman coins seems to have been made in the year 1806. Thenceforth a number of coins of other Roman kings also came to light.

The reason for the occurrence of these coins is obvious, since we have number of references of the commodities exported to Rome and the articles we got in exchange. Pepper and Muslin were the predominent articles that were purchased by Romans. Hence Pepper was called as Yavanapriya. Likewise, pottery, glass-wares, lamps, gold and wine were the favourite things purchased by Tamils from them.[2]

At one stage it is known that the Romans had to mourn for the continuous drainage of their gold to Tamilnadu in exchange for the merchandise. Thus the trade relation was strongly established and continued between the two countries.

It is also said that in an average one ship a day left Egyptian ports to the East. Hence it has become necessary for them to establish settlements in Tamilnadu. Such settlements had already been located at Arikka-medu near Pondicherry and Kaverippoompattinam. Due to the discovery of imported wine jars and Roman Potteries at Vasavasamudram in Chengai Anna District, it is also believed to have been a Roman settlement. Karur and Kodumanal also seem to have been frequently visited by Roman traders.

Recent discoveries at Alagankulam have unmistak-ably proved that there must have been another Roman settlement. Alagankulam is located on the eastern coast near Ramanathapuram. In the first season of the excavation conducted there, a coin of Roman King Valentine II was discovered. It is datable to 4th

century A D. (383-395 A.D ) It is identified that it was minted from the mint of Antioch.

The reading of the legend is as follows :

**Obverse:** *Head of the king with legend "DN VALENTINIANVS PF AVG"*

**Reverse:** *Seated figure holding a pole by its left hand facing to right and carrying a child in its right hand. The legend reads 'CONCOR - DI AVCCC. (The concord of the 3 Augusti)*

**Weight :** *1·720 grams.*

A coin of Valentine is found mentioned in the collection of Elliot. But the provenance of this coin is not given.

In the second season, another Roman coinb elonging to the period of Arcadius has been unearthed. Arcadius ruled from 395 A D. to 408 A.D. One such coin of Arcadius is referred to have been in the collection of Scott. It is also not known the place where from it was collected.

With the discovery of the above two copper coins it is proved beyond doubt that trade contacts between Tamilnadu and Rome must have existed even beyond 4th century A.D. In support of the above statement one can cite the occurrence of Roman potteries and Amphroae in large number in Tamilnadu.

The description of the coin is as follows.

**Obverse :** *Head of the king with legend (D.N.A.)RCADIVS*

**Reverse :** *Seated figure holding something in its right hand and carrying probably a child by its left with legend which is fully corroded.*

**Weight :** *1·206 grams.*

From the occurrence of these coins one point is now clear that though the trade started on the west coast in the 2nd century B C. it seems to have extended its trade horizon to the eastern part gradually in later centuries and had established strong settlements on the eastern coast of Tamilnadu. This switchover to East must have been due to their increasing desire to purchase pearls and shell products such as bangles and beads which were abundantly available on the East coast.

*Foot-notes*

1. P. L. Gupta, The Early Coins from Kerala, Reprinted 1988.
2. Agananuru 149.
3. I am thankful to Thiru. A. Abdul Majeed, Assistant Director, Thiru. D. Thulasiraman, Curator and Thirumathi R. Vasanthi, Archaeologist for having unearthed these coins at Alagankulam.

# வீரகேரளன் காசு

**ஆர். வசந்தகல்யாணி**

கல்வெட்டாய்வாளர்

பண்டைக் காசுகள் பற்றி ஆய்ந்த அறிஞர்கள் தம் நூல்களில் 36.3 தானிய எடையுள்ள வெள்ளிக் காசினை வெளியிட்டனர்.[1] இக்காசில் ஸ்ரீவீர கேரளஸ்ய என்று எழுதப் பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். அண்மையில் செங்கல்பட்டு மாவட்டம் கருவம்பாக்கம் என்ற இடத்தில் கிடைத்த காசுக் குவியலில் இருந்த காசுகளில் ஒருபுறம் வீரகேரளஸ்ய என்றும் மறுபுறம் கண்டராங்குசஸ்ய என்றும் நாகரி எழுத்துகளில் எழுதப் பட்டிருப்பதாக திரு. லட்சுமி நாராயணராவ் என்பவர் வாசித்திருக் கிறார். இக்காசு திருநெல்வேலி மாவட்டம் வாகைக்குளத்திலும், இராமநாதபுரம் மாவட்டம் பந்தல்குடியிலும், செங்கல்பட்டு மாவட்டம் கருவம்பாக்கத்திலும் கிடைத்திருப்பதாலும், தனிப் பட்டவர்களின் சேகரிப்பில் ஏராளமாகக் காணப்படுவதாலும், தமிழ்நாடு முழுவதும் அதிக அளவில் புழக்கத்தில் இருந்திருக்க வேண்டும்[2] என்பது தெளிவு.

காசியல் அறிஞர்களான சட்டோபாத்யாய, வித்யாபிரகாஷ், லக்ஷ்மி நாராயணராவ், இரா. நாகசாமி ஆகியோர் வீரகேரளன் காசைப் பற்றி ஆய்வு செய்துள்ளனர். இவ்வறிஞர்கள் காசிலுள்ள எழுத்தமைதி கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று வரையறை செய்து கொண்டு ஆய்வு செய்துள்ளனர்.

11, 12-ஆம் நூற்றாண்டளவில் காசுகளை வெளியிடும் அளவிற்கு வீரகேரளன் என்ற பெயருடைய மன்னர் யாரும் இல்லை. ஆதலின் இக்காசு மேலும் ஆய்விற்குரியது எனத் திரு சட்டோ பாத்யாய கருத்துத் தெரிவித்துள்ளார்.

வீரகேரளன் என்ற பெயரில் கொங்கு நாட்டுப் பகுதியில் பல மன்னர்கள் இருந்திருக்கிறார்கள் என்றும் அவர்களில் சிலர்

கண்டன் என்ற பெயரை வைத்திருந்தனர் என்றும் அண்மைக் காலத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுகள் சில இவர்களைக் களப்பிர வமிசத்தைச் சார்ந்தவர்களாகக் கூறுகிறது என்றும் சுட்டிக்காட்டிய திரு. இரா. நாகசாமி அவர்கள், மேலும் அதிக காசுகள் கிடைத்துச் சரியான தெளிவு ஏற்படும் வரை இதை இடைக் காலச் சேரர் காசாகக் கொள்ளலாம்[5] என்றும் கூறியுள்ளார். மேற்குறிப்பிடும் சேர வீரகேரளர் அனைவருமே கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். அவர்கள் அவ்வப்போது கொங்கு நாட்டில் சிற்சில ஊர்களை மட்டுமே பிடித்தனர். நிலையான ஆட்சியை அவர்கள் காலத்தில் காண முடியவில்லை. மேலும் அந்தக் கால கட்டத்தில் தமிழ் நாட்டில் சோழர்களுடைய மிகப் பெரிய, நிலையான ஆதிக்கந்தான் இருந்தது. அவர்களை மீறிச் சேரர்கள் தமிழ் நாட்டில் காசுகளை வெளியிடும் அளவு ஆதிக்க வலிமை கொண்டிருக்கவில்லை என்பது தெளிவான வரலாற்று உண்மை. எனவே, அவர்கள் வெளியிட்டிருக்க வாய்ப்பில்லை.

திரு. பி. எல். குப்தா அவர்கள் இக்காசு இராஜராஜனுடையது என்று கூறியுள்ளார். அதற்கு அவர் கூறும் காரணம் இராஜராஜனுக்கு வீரகேரளன் என்ற பெயர் இருந்தமையேயாம். மேலும் செங்கற் பட்டில் இக்காசு கிடைத்திருப்பதால் இப்பகுதி வரை எந்தச் சேர மன்னனும் வரவில்லை என்பதாலும் இராஜராஜனுடையது என்று கூறுகிறார். ஆயின் இராஜராஜன் தன்பெயராலன்றி விருதுப் பெயர் களால் காசுகளை வெளியிடவில்லை என்பது இங்கு நோக்கத்தக்கது. சேரமன்னர் எவரும் வெளியிடவில்லை என்பதாலேயே இராசராசன் வெளியிட்டான் எனக்கொள்ள வேண்டிய கட்டாயமில்லை. (செங்கற்பட்டு வரை வந்து அரசாட்சியினைப் பிடித்த சேர மன்னன் ஒருவன் இருந்துள்ளான் என்பதைப் பின்னர் நிறுவவுள்ளேன்.)

பல கேரள மன்னர்கள் வீரகேரளன் என்ற பெயரில் ஆண்டிருந்தாலும் காசு வெளியிட்ட மன்னன் கி.பி. 1127-ல் வாழ்ந்த வேணாட்டரசன் வீரகேரளனாக இருக்கலாம். ஏனெனில் இவன் சோழப் பேரரசு சேர நாட்டின்மேல் செலுத்திய ஆதிக்க பலத்தைக் குறைத்தவன் என்று அதற்குச் சான்றாக சோழபுரம், திருவல்லம் ஆகிய ஊர்க் கல்வெட்டுகளை காட்டியுள்ளார்

திரு. வித்யாபிரகாஷ்[6] என்ற அறிஞர். லக்ஷ்மிநாராயணராவ் அவர்களும்[7] இக்கருத்தையே கூறியுள்ளார். வீரகேரளன் என்னும் பெயர் ஒற்றுமை தவிர இம்மன்னன் பெருவேந்தனாக இருந்திருக்க வில்லை. தமிழ்நாட்டில் ஒரு சிறு நிலப் பகுதியைக் கூடத் தன் ஆளுகைக்குள் கொண்டு வரவில்லை. இச்சேரன் தன்நாட்டின் மேல் சோழப்பேரரசு செலுத்திய ஆதிக்கத்தைக் குறைத்திருக்கலாம். ஆனால் தன் ஆதிக்கத்தைத் தமிழ்நாட்டில் செலுத்தவில்லை. இவன் காலத்து ஆண்ட தமிழ்ப் பெருமன்னன் விக்ரமசோழன். இவன் ஆட்சிப்பரப்பை இழந்த நிலையோ, கேரள மன்னனுக்குத் தோற்ற நிலையோ யாண்டும் கல்வெட்டுகளில் காணப்படவில்லை. கன்னியாகுமரி வரை உள்ள நாஞ்சில் நாட்டுப் பகுதிகளும் இவன் ஆளுகையின் கீழேயே இருந்தது. இப்படிப்பட்ட அரசியல் பின்னணியில், தனியாட்சி செய்ய இயலாத நிலையில் திருவனந்த புரப்பகுதியை மட்டும் ஆட்சிபுரிந்த இந்த வீரகேரளனால் எவ்வாறு தமிழ்நாடு முழுமையும் காசுகளைப் புழக்கத்தில் விட்டிருக்க இயலும்? எனவே, உறுதியாக இம்மன்னன் காசினை வெளி யிட்டிருக்க இயலாது.

ஆக, எந்த மன்னன் வரலாற்றில் இடம்பெறத்தக்க நிலையில் ஆட்சியைப் பெருக்கினானோ, எந்த மன்னனின் ஆட்சியில் தமிழ்நாடு முழுவதும் வெற்றி கொள்ளப்பட்டதோ அந்த மன்னன்தான் இக் காசினை வெளியிட்டவன் என்று கொள்வதே பொருத்தமாகும். இந்த அடிப்படையில் நாம் தமிழ்நாட்டின் வரலாற்றை நோக்கும் போது வீரகேரளனை அடையாளம் காணக் கல்வெட்டுகள் நமக்குப் பெருந்துணை புரிகின்றன.

## வீரகேரளன் யார்?

காலத்தை அறிய எழுத்துக்களின் வடிவமும் ஓர் ஆதாரமாகும். ஆயின் அதை மட்டும் ஆதாரம் என்று கொண்டு மன்னனை அறிய முற்பட்டதால் இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. காசுகளையும், கல்வெட்டுகளையும் இன்னபிற வரலாற்றுச் சான்றுகளையும் கொண்டு வீரகேரளனை ஆராய முற்பட்டபோது தெளிவு கிடைத்தது.

கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டுகளைக் கடந்து ஒரு நூறு ஆண்டு முன்னேறுவோம். கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகள் சிலவற்றைக் கொண்டு வீரகேரளனை அடையாளம் காண்போம்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னர்களுள் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்த மன்னன் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1268-1318) இவனுக்கு இரு புதல்வர்கள். ஜடாவர்மன் (கலியுகராமன்) வீரபாண்டியன் (கி.பி. 1297-1342), மற்றொருவன் ஜடாவர்மன் எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டியன் (1303-1325) இவர்கள் தவிர குலசேகரனின் மகள் வயிற்றுப் பேரன் ஒருவனும் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் என்ற பெயரில் ஆட்சி செய்துள்ளான் (கி.பி. 1304-1319) முதலாம் மாறவர்மன் குலசேகரன் கல்வெட்டு களும், பின்னர் வந்த ஜடாவர்மன் வீரபாண்டியன், ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் ஆகியோர் கல்வெட்டுகளும் தமிழகம் முழுவதும் கிடைக்கின்றன. திருவத்தியூர், திருவெண்ணைநல்லூர் திருமழவாடி, திருவீழிமிழலை, திருவரங்கம், திருவாஞ்சியம், மதுரை, இரத்தினகிரி, திருக்கோட்டியூர், தாரமங்கலம், அச்சரப்பாக்கம், வெடால் ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன. இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் முகமதியப் படையெடுப்பு தமிழ்நாட்டில் நடந்தது. கி.பி. 1311-இல் அலாவுதீன் கில்ஜியின் படைத் தளபதி மாலிக்காபூரின் தலைமையில் படைகள் தமிழ்நாட்டை முற்றுகையிட்டன. திருச்சியும் மதுரையும் சூறையாடப்பட்டன. கோயில்கள் கொளுத்தப்பட்டன. மாலிக்காபூர் ஏராளமான பொருட்களோடு தில்லிக்குத் திரும்பினான்.

(இக்கட்டுரையின் தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் அச்சகத்தில் அச்சிட்டு, இத்துறை இயக்குநருக்காக திரு. க. குழந்தைவேலன், கல்வெட்டாய்வாளரால் வெளியிடப்பெற்றது.